
www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறிஞ்சிக் குறைகள்

பழ-கருப்பையா.

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

மலையக மக்களின் மாண்புமிகு தலைவர்கள் என்று தம்மை தம்பட்டம் அடித்துக்கொள்ளும் இரு தொழிற்சங்கத் தலைவர்களான தொண்டமானும்,ரஞ்சன்விஜயரத்தினாவும் இரு அமைச்சர்களாக இருந்தும் மலையக மக்கள் தங்கள் குறைகளைத்தீர்க்க ஆள் தேடி அலையவேண்டியுள்ளது. தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் ரஞ்சன்விஜயரத்தினா தோட்டத் தொழில் அமைச்சராக உள்ளார். இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் தலைவர்தொண்டமான்உல்லாசத்துறை,கிராமியத் தொழில்துறை அமைச்சராக உள்ளார். இதைவிட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செல்லச்சாமியும் ஒரு இராஜாங்க அமைச்சர். இத்தனை பேர் இருந்தும் வாழ்க்கைச் செலவினங்களுக்காக விசேட சம்பள உயர்வு 200ரூபா என்று நிதிஅமைச்சர் விஜயதுங்கா அறிவித்தது மலையக மக்களுக்கு கிடைக்க வில்லை என்பது பற்றி யாரும் மூச்சு விடக்காணோம்.

நாட்டின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி அந்நியச் செலவாணியை ஈட்டித்தரும் மலையகத்தொழிலாளர்கள் இன்னும் நவீன அடிமைகளாய் கணிக்கப்பட்டு வருவது வேதனைக்குரியதாகும். கடந்த ஆண்டில் தேயிலை ஏற்றுமதி மூலம் 13,664 மில்லியன் ரூபாய்களைப் பெற்றுள்ளதாக மத்தியவங்கிக் கணக்கு கூறுகிறது. ஆனால் இதை ஈட்டித்தந்த மக்களுக்கு நாட்டின் நிதி அமைச்சர் அறிவித்துள்ள சம்பள உயர்வு கிடைக்க வழியில்லை என்பது அவர்களை வேறு கண்ணோட்டத்திலும் ஏனைய மக்களை வேறு கண்ணோட்டத்திலும் அரசு பார்ப்பதாகவே கணிக்க வேண்டியுள்ளது. கடந்த வருடம் வழங்கப்பட்ட 200ரூபாசம்பளஉயர்வு கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதை இங்கனம்தொடரவிடாமல் அம்பலப்படுத்தி வாழ்க்கைச் செலவினங்களுக்கான சம்பளஉயர்வுகள் மலையக தொழிலாளர்களுக்கு கிடைக்கவழிசெய்ய முற்போக்கு சக்திகள் முன்வரவேண்டும்.

**மலையகம் எங்கள் பூமி!**

**நாம் இங்கேயே வாழ்வோம்!!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஒருதேசிய இனத்தின் விடுதலை, ஒடுக்கப்படும் வர்க்கத்தின் விடுதலை, அல்லது காலனி ஆதிக்கத்தின் பிடியிலிருந்தது விடுதலை, போன்றவற்றுக்கான போராட்டங்களின் வெற்றிகள் யாவையும், போராட்டத்திற்கும் மக்களுக்குமிடையில்இருக்கும் பிணைப்பும், அதனூடாக சர்வதேச அபிப்பிராயமும், போராட்டப் புலத்தின் அக புற சூழ்நிலைகளுமே தீர்மானிக்கின்றன. இவ்வகையான அடிப்படைத் தேவைகள் யாவையும் கணக்கிலெடுக்காது தமிழ் பேசும் மக்களின் மீது திணிக்கப்பட்டிருக்கும் ஈழதேசத்தின் யுத்த கால நிலைமைகளானது நாளுக்கு நாள் மக்களுக்கு அவலங்களையே வளர்ச்சியடையச்செய்து வருகின்றன. இலங்கைத்தீவில் உழைக்கும் வர்க்கத்தின் ஒட்டு மொத்தமான பொது எதிரியாக வளர்ச்சியடைந்திருக்கும் பௌத்த பேரினவாத தரகு முதலாளித்துவ ஆளும் தலைமைகளுக்கும், தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாமே என்ற பாசிசக்குணாம்சங்களுடன் குறுந்தேசிய வாதிகளாக உருவகம் பெற்றிருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இவ்யுத்தம் தேவைப்படுவது வரலாற்றைச் சரியாகப்புரிந்துகொண்டவர்களுக்கு ஒன்றும் வியப்புக்குரிய விடயமல்ல. தென்னாசியப் பிராந்தியத்திலே, அதிலும் குறிப்பாக இலங்கைத்தீவின் ஆளும் வர்க்கத்தின் ஏகாதிபத்திய தாசர்களாக தோற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்தத்தின் வளர்ச்சியானது அதிகாரப் போட்டியின்விளைவுகளே ஈழதேசத்தில் எமது மக்கள் ஆயிரக்கணக்கில் படுகொலைசெய் யப்பட்டும் தேசத்தின் பொருள்வளங்கள் நிர்மூலமாக்கப்பட்ட போதும் இவ்விரு பகுதியினரின் நலன்களுக்கு ஆபத்து என்கின்ற சூ ழ்நிலைகள் உருவாகின்றபோது பேச்சுவார்த்தைக்கான நாற் காலிகளில் அமர்வதும் கை குலுக்கல் செய்வதும் இவர்களுக்கு வர லாற்றில் வழக்கமாகிப் போய்விட்ட சமாச்சாரமாகும். இதன் அடிப்படையிலேயே இன்று விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவுக்கும் இலங்கை அரசாங்கப்பிரதிநிதிகளுக்கு மிடையில் இலண்டனில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரகசிய ப் பேச்சுவார்த்தைகளாகும்.

அணமைக்காலமாக வெளி உலகில் புலிகள்-மொசாட் உறவுகள் தொடர்பாக பரபரப்பான செய்திகள் அடிபட்டுக்கொண்டிருப் பது, இவ்வகையான செய்திகளை சி. ஐ. ஏ என்னும் அமெரிக்க உள வுப்பிரிவில் முரண்பாடுகாரணமாக வெளியேறிய கனேடிய ந பர் ஒருவர் எழுதியபுத்தகத்தில் அம்பலமாகியிருப்பதும், அப்புத் தகம்விற்பனையாவதை தடைசெய்திருப்பதும்இலங்கையில்

ஏகா திபத்தியத்தின்அக்கறையைப்புரிந்துகொள்வதற்குபோதுமானது.

புலிகளின் தலைமை தமது குறுகிய நலன் களைப் பாதுகாப்பதற்காக மொசாட் உளவுப்பிரிவினரிடம் உ ள்வாங்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாகவே இஸ்ரேலிய எதிர்ப்பு வாதத்தைக் கொண்டிருக்கும் பாலஸ்தீன போராட்டச க்திகளிடம் பயிற்சிகளைப் பெற்று மற்றைய ஈழத்து போராட் ட சக்திகள் அழிக்கப்படவேண்டிய தேவையும், இஸ்லாமியத் தமி ழர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் கொண்டிருக்கின்றனர்.

பேரினவாத அரச் தனது நரித்தனமான அரசிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லினூடாக தன்னை ஒரு சமாதானப்பிரியனாக வெளியுலகிற்கு காட்ட முற்பட்டிருப்பதும்,அது புலிகளுக்கு கிடைத்த பலமான சந்தர்ப்பங்களை எல்லாம் அரசியல் தந்திரோபாயமற்ற,சுத்த இராணுவக்கண்ணோட்ட நடவடிக்கைகளினால் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பது உண்மையானாலும்,மறுபுறமாக பேரின வாத சக்திகளானது தமிழ்பேசும் மக்களின் நியாய பூர்வமான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் எவ்வித அக்கறையும் எடுக்காது இருக்கிறது என்பதும் உண்மை. அண்மைக்காலமாக தமிழ்-முஸ்லீம் கட்சிகளிடையே நடைபெற்ற தொடர்ச்சியான பேச்சுவார்த் தைகளின் விளைவால் உருவாக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளில் ஒன்றான வடக்கு-கிழக்கு இணைப் புக்கு ஆப்புவைக்கும் முயற்சியில் பேரினவாத சக்திகளும் அதன் தொங்கு தசைகளும் இறங்கியுள்ளார்கள் என்பதும் இங்கு கவனிக் கபட வேண்டிய மற்றுமொரு முக்கிய விடயமாகும். ஆகவே புலிக ளின் நடவடிக்கைகள் மக்கள் விரோத தன்மையை கொண்டிருந்த போதும் பேரினவாத சக்திகளுடன் ஒத்துழைப்பதானது மக்களி ன் நலன்களின் அடிப்படையில் அமையமுடியாது என்பதுடன் பொது எதிரிக்கெதிரான ஐக்கிய முன்னணி என்பதும் சாத்தியமில்லா து போய்விடும். சிங்களத் தேசியக்கட்சிகள் தமது அரசியல் பிழைப்புக்காக பேரினவாத அரசியலை மேற்கொண்டு வருகி ன்றபோதும் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற எண்ண அ லைகள் வளர்ச்சியடைந்து வருவதும்,தமிழ்பேசும் மக்களின் உரி மைப்போராட்டத்திற்கு கிடைத்திருக்கின்ற சாதகமான சூழ்நி லைகளாகும். இவைகளை மேலும் வளர்த்தெடுப்பது ஜனநாயக முற் போக்கு சக்திகளின் வரலாற்றுக்கடமையாகும். இவைகளே மக்க ளுக்கான அமைதி,சமாதானம்,ஜனநாயகம் போன்ற அடிப்படைத்

www.tamilarangam.net

# ஈழத்து முற்போக்கு இலக்கிய முன்னோடி என்.எஸ்.எம்.

ஈழத்து முற்போக்கு இலக்கிய கர்த்தாக்க
ளில்முக்கியமானவரும், பிரதேச மணம் வீசக்கூ
டிய மலையக மக்களுக்கும் மண்ணுக்குமான இலக்
கியப் படைப்புக்களை சிருஷ்டித்தவர்களின் முன்
னோடியும், இடது சாரிக்கருத்துக்களில் ஈடுபா
டுகொண்டிருந்தமையால் கம்யூனிஸ்ட் கட்சியில்
இணைந்து செயல்பட்டவருமான தோழர் எம்.எஸ்.
எம். இராமையாவின் மறைவு முற்போக்கு இலக்
கிய உலகத்துக்கும் முற்போக்கு சக்திகளுக்கும்
பேரிழப்பாகும்.

கலை, இலக்கிய உலக நண்பர்களாலும் தோழர்
களாலும் என்.எஸ்.எம் என்று மிகவும் பாசத்துட
ன்அழைக்கப்பட்ட தோழர் இராமையா மலைய
கத்தின் பதுளைப் பிரதேசத்தை பிறப்பிடமா
கக் கொண்டவர். தேயிலைத் தோட்டங்களின்
வாழ்க்கைச்சூழலையும் அத்தோட்டங்களில் உள்
ள அவலங்களையும் ஜீரணிக்க முடியாது 1960 ல்
கொழும்பு நோக்கி நகர்ந்தார். எந்த மண்
ணையும் மக்களையும் அவர்களின் துயரம்நிறைந்
தவாழ்க்கை முறைகளையும் மறக்க முனைந்தா
ரோ அவைகள் அனைத்தையும் மறக்க முடியாது த
னது கலை இலக்கியப் படைப்புகளினூடாகவும்
அம்மக்களுடனும், மண்ணுடனும் இறுதிவரை தனது
பிணைப்பை இறுக்கமாக்கிக்கொண்டார்.
எழுத்துலகப் பிரவேசமாக வானொலிக்கு நா
டகங்கள் எழுதுவதினூடாக காலடி எடுத்துவைத்
த தோழர் இராமையா. தாமரைக்குளம், தலைவ
ர்வீட்டுக் கலியாணம், ஒரு மின்னல் போன்ற ப
டைப்புக்கள் இவரை கலை இலக்கிய உலகிற்குஇ
னம்காட்டியது. 1956ற்கு பிற்பட்ட காலத்தில் தே
சிய அடிப்படையிலான இலக்கியப் படைப்புக்க
ள்ஊற்றெடுத்தன. தமிழ் பேசும் மக்கள் மத்தியி
ல் உருவான இலக்கியப் படை

கே உருவான இலக்கியப் படைப்புக்கள் யாவு
தேசிய இலக்கியங்களாகவும் மலையகம், மட்
க்களப்பு போன்ற பிரதேசங்களில்உருவான
பிரதேச இலக்கியங்களாகவும் எமது தமிழ்
ரபுவழிவாத இலக்கியகர்த்தாக்களால் தரம்
பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட வேளையில் ஈழ
தின் நவீன இலக்கிய வளர்ச்சிக்கு முக்கிய ப
களிப்பு செய்து கொண்டிருந்த பேராசிரிய
கைலாசபதியினால் தோழர் இராமையா ச
கதைத் துறைக்கு இழுக்கப்பட்டார். பிரதேசம
ம்வீசக்கூடிய வகையில் மண்ணினதும், மக்களின
ம் தன்மைகளையும் வாழ்க்கை முறைகளையும் ய
தார்த்தத்துடன் அணுகிய முறைகளை அவரது
டைப்புக்களில் காணக்கூடியதாக இருந்தது. 19
இல் இவருடைய 'ஒரு கூடைக் கொழுந்து' என்னும்
சிறுகதை தினகரன் வாரமஞ்சரியில் வெளி
தநாட்களில் வாசகர்கள், இலக்கிய விமர்சக
கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்த
யதோடு இலக்கிய உலகில் 'ஒரு கூடைக் கொ
ந்து' இராமையா என்று அழைக்கக் கூடிய அளவு
கு அலை கடலுக்கு அப்பாலும் மிளிர்ந்தார். அ
ர்தனது 20வருடகால இலக்கிய வாழ்வில் 14சிறு
கதைகளை மட்டுமே இதுவரை படைத்துள்ளார்.
வர் இப்படைப்புகளினூடாக மலையக மக்களி
நவீன அடிமைத் தளத்தில் வாழ்ந்து கொண்டிரு
கும் மக்களின் வாழ்க்கைச் சூழலையும் அம்மக்க
ளின் வாழ்க்கையில் இருள் சூழ்ந்துள்ள எண்ணங்
ளையும் தனது எழுத்தாற்றல் மூலம் வெளிக்கொ
ணர்ந்த சிந்தனையாளராக இலக்கிய உலகில்
கருதப்படுகிறார். வாசகர் வட்டம் என்னும் வெ
ளியீட்டினூடாக வெளியான 'அக்கரை இலக்கிய
ம்' என்னும் தொகுதியில் தோழர் இராமையா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம். இச் சிறுகதை ஆசிய நாடுகளில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த சிறுகதைகளில் இதுவும் ஒன்றாகும். ஏசியன் சஞ்சிகையில் இச்சிறுகதை வெளிவந்துள்ளதுடன் இவருடைய மற்ரய சில சிறுகதைகள் சிங்களம், ரஷ்யா, ஆங்கிலம், செக் போன்றமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. மு.நித்தியானந்தன் அவர்களின் கடினமுயற்சிகளினால் வைகறை என்னும் வெளியீட்டின் மூலம் தோழர் இராமையாவின் 14சிறுகதைகளில் 'சிரஞ்சீவி', 'நிலவைப்பிடித்து' ஆகிய இரண்டு சிறுகதைகளைத் தவிர மற்றய 12சிறுகதைகளும் 'ஒருகூடைக்கொழுந்து' என்னும் சிறுகதைத்தொகுப்பாக 1980சித்திரையில் வெளிவந்ததுடன் அவ்வருடத்திற்கான சாகித்தியமண்டல விருதையும் இத்தொகுப்பினூடாக பெற்றுக் கொண்டார். 'மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின்' தலைவராக செயல்பட்டு எழுத்தாளர்களுக்கு உற்சாகமூட்டுவதிலும், புதியபடைப்பாளிகளை உருவாக்குவதுடன் நின்றுவிடாது அவர்களுடைய படைப்புக்களிலும் மண்ணின் மணம்வீசக்கூடிய வகையில் மக்களுக்கான சுதந்திர உணர்வையும், விடுதலை வேட்கையையும், மனிதாபிமான உணர்வையும் வளர்த்தெடுக்கப்படுவதில் அக்கறை காட்டிவந்தார். இயல்பாகவே அவரிடம் காணப்பட்ட இடது சாரிக்கருத்துக்களும், அவர் கொண்டிருந்த அரசியல்ஈடுபாடும் அவரை உன்னதமானமனிதனாக முற்போக்கு சக்திகளுக்கு இனம்காட்டியது, மலையகத்தில் மாற்றத்தினை காணவேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் செயல்பட்டவர்களில் தோழர் இராமையா முன்னோடியாகதிகழ்கின்றார். அவரின் வரலாற்றுப் பாத்திரம் மிகவும் கனதியானது. இலக்கியத் துறையில்மட்டுமல்லாது அவர் கொண்டிருந்த சித்தாந்தத்தையும் நடைமுறையில் கடைப்பிடித்தார். மலையகத்தின் உறுஞ்சும் அட்டைகளான தொண்டமான் போன்ற ஆளும் வர்க்கத்துக்கு சேவகம் செய்கின்ற கூட்டங்களின் தொல்லைகளுக்கும், மிரட்டல்களுக்கும் மத்தியில் ஓர் உண்மையான முற்போக்குவாதியாக வாழ்ந்து காட்டியதுடன் முற்போக்குஅரசியலையும் வளர்த்தெடுத்தெடுப்பதில் அக்கறைகாட்டினார்.

கடந்த 10வருடகாலத்துக்கு மேலாகவே கண்பார்வைக்குறைவு, உடல்தளர்வு, பலவீனப்படும் தன்மைபோன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டதுடன் வறுமையும் அவரைச் சூழ்ந்து கொண்டவேளையிலும் கொள்கைக்கும், நடைமுறைக்குமிடையில் அவர் எழுப்பாது இறுதி வரை வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து விட்டாலும் அவரின் படைப்புகளும், அவரது வாழ்க்கைமுறையும் எந்த மக்களின் நலன்களைப்பிரதிபலித்ததோ அந்த மக்களின் மத்தியில் தோழர் இராமையாவின் நினைவுகள்வாழ்ந்துகொண்டேயிருக்கும். அவர் எந்த இலட்சியங்களுடன் இறுதிவரை வாழ்ந்தாரோ அதேஇலட்சியங்களுக்காக உழைப்பதே ஒவ்வொரு முற்போக்கு இலட்சியவாதியும் அவருக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.


## வெகுஜனம்

இருமாதங்களுக்கொருமுறை வெளிவரும்

அரசியல், இலக்கிய, கலாச்சார இதழ்.

ஆசிரியர்- வெகுஜனம் ஆசிரியர் குழு.

சந்தா- வருடமொன்றுக்கு 20 டி.எம்.

வெளியீடு- VEKUJANAM PUBLICATION'S

MITTWEG STR -21


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிக்கரக்குவாவும் சண்டினிஸ்டுகளும்.

வி. போல்




மத்திய அமெரிக்க பிராந்தியத்திலே அமெரிக்க எகாதிபத்தியத்திற்குப் பயங்கர சொப்பனமாக இருந்து கொண்டிருந்தது கியூபா. முதலாளித்துவத்திற்கு துருப்பிடித்துவிடுமோஎனப் பயந்து கொண்டிருந்த அமெரிக்காவிற்கு எரியும் தீயிற்கு நெய் வார்த்தது போல் 1979ம் ஆண்டு புதியதொரு விடியலைக் கண்டது நிக்கரக்குவா. அமெரிக்கா மீண்டும் ஒருமுறை கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்துக்கொண்டது. மத்திய அமெரிக்கப்பிராந்தியம் சோசலிசத்தினால் விழித்துவிடுமோ, விடிந்துவிடுமோ எனப்பயந்து கொண்டது அமெரிக்கா. தன்னுடைய பொருட்களுக்கு சந்தையில்லாமல் போய்விடுமோ, தன்னுடைய உற்பத்திகளை அந்தந்த நாடுகளில் குறைந்த செலவில் ஏற்படுத்துவதற்கான முதலீடுகளை அந்தந்த நாடுகளில் செய்ய முடியாமல் போய்விடுமோ என அமெரிக்கா புழுங்கிக் கொண்டது.

ஆம்! மண்டியிட்டிருந்த நிக்கரக்குவா எழுந்து நிமிர்ந்து நின்றுகொண்டது. அனஸ்தாசியோ சோமோசா என்ற முதலாளித்துவ சர்வாதிகாரியின் ஆட்சிக்கெதிராக, சகல அடக்கு முறைகளையும் உடைத்தெறிந்து ஒரு மக்கள் புரட்சியை ஏற்படுத்தி புதிய ஆட்சியைக்கண்டது நிக்ரக்குவா. FSLN( நிக்கரகுவா சண்டினிஸ்ட விடுதலை முன்னணி) என்ற இயக்கத்தின் தலைமையில் விடியலைக்கண்ட நிக்கரகுவாஇயக்கத்தின் தலைவராக இருந்த 33வயதுடைய தோழர்டானியல் ஒட்டேகாவை நாட்டினது தலைவராக ஆக்கிக்கொண்டது. தோழர் ஒட்டேகாவும் அவரது கட்சியும் மாக்சிச சோசலிச நடைமுறைத்தத்துவங்களில் நம்பிக்கை கொண்டிருந்தது. நாட்டையும் மக்களையும் முன்னேற்றும் பாதையில் சண்டினிஸ்ட அரசாங்கம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. மக்களோடு நின்று மக்களுக்காகப் போராடிய சண்டினிஸ்டுகளுடன் மக்கள் ஒத்துழைத்தார்கள். அதுவரை அடங்கி முடங்கிக் கிடந்த மக்கள் சண்டினிஸ்ட அரசாங்கம் வந்தபின் அவர்களது சோசலிச பொருளாதார அரசியல் முறைகளில் நம்பிக்கை கொண்டனர். சோமோசாவின் ஆட்சியைத் தூக்கியெறிய சண்டினிஸ்டுகள் நடத்திய போராட்டத்தில் நொந்து கிடந்த நிக்கரக்குவாவை 1979ம் ஆண்டுக்குப்பின் சண்டினிஸ்டுகள் கட்டியெழுப்பப்பாடுபட்டனர். மக்களுக்கு இயலுமான துறைகளில் அவரவர்களை ஊக்கப்படுத்தி சிறுகைத்தொழில், விவசாயம், தேனீவளர்ப்பு இன்னும் இதர கைத்தொழில்களில் அன்று வரை பின்தங்கிய நிலையிலிருந்த மக்களுக்கு உற்சாகம் கொடுத்து ஊக்குவித்தது சண்டினிஸ்ட அரசாங்கம், அன்றுவரையிலிருந்த முதலாளித்துவ முறைக்கு சாவுமணியடித்து சோசலிச பொருளாதார ஆட்சிமுறையை ஏற்படுத்தியது. மனிதர்களின் சிந்தனை எப்பொழுதும் ஒரேமாதிரியோ ஒரேபோக்கிலோ இருப்பதில்லை. அதேபோல் சண்டிஸ்டுகளு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கு எதிரானவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். புரட்சியில் சண்டினிஸ்டுகளுடன் தொங்கியிருந்த சில சந்தர்ப்ப வாதிகள் பின்பு சண்டினிஸ்டுகளுக்கு எதிராக சேர்ந்து கொண்டனர். சோசலிச நாடுகளுக்கும் மக்கள் புரட்சிக்கும் எப்பொழுதும் உதவி வழங்கும் சோவியத்யூனியன் நிக்கரக்குவாவுக்கும் இராணுவபொருளாதார உதவிகளை நேரடியாகவும், கியூபாவினூடாகவும் செய்து வந்தது. சோவியத்யூனியனுடைய நேசத்தைக்கண்டும், நிக்ரக்குவாவில் வெடித்த புரட்சித்தீ ஏனைய மத்திய அமெரிக்க பகுதிகளெங்கும் பரவிவிடுமோவென்று அமெரிக்கா ப பயந்து கொண்டது.

அமெரிக்கஅரசாங்கமும், அதன் உளவு ஸ்தாபனமுமான CIAயும் நிக்கரக்குவாவின் ஆளுமையை மழுங்கடிக்கவோ, தன்வசமாக்கவோ எல்லாவகையிலும் சிந்தித்தது. ஏற்கனவே தோழர்பிடல்கஸ்ரோவை(கியூபாத்தலைவர்) ஒழித்துக்கட்டும் கங்கணமும் முயற்சியும் தோல்வியடைந்த CIA, தனது பட்டியலில் தோழர் ஒட்டேகாவையும் சேர்த்துக்கொண்டது. ஆனால் சண்டினிஸ்டுகளின் பாதுகாப்பு பலமாக இருந்தது. 79ம்ஆண்டின் புரட்சிக்குப்பின் அமெரிக்கா உதவி வழங்கும் சாட்டில் நிக்கரக்குவாவை தன்வசமாக்க எண்ணியது. இதே அமெரிக்காதான் சோமோசா அரசுக்கு ஆயுத பொருளாதார உதவிகளையும், எதிர்ப்புர




ட்சிகர சக்திகளுக்கும் சண்டினிஸ்டுகளுக்கு எதிரானவர்களுக்கும் உதவிகளை வழங்கியது. பணத்தால் அடிப்பது என்பது ஒரு முதலாளியின், பணக்காரனின், அமெரிக்காவின் வழக்கம். அப்படியே அன்று ஆட்சியிலிருந்த ஜிம்மிக்காட்டர் நிர்வாகம் நிக்கரகுவாவுக்கு 61மில்லியன் டொலர் பெறுமதியான உதவிப் பொருட்களை வழங்கியது. வீழ்ந்திருந்த தேசத்தை கட்டியெழுப்ப சண்டினிஸ்டுகள் இவ்வுதவியை தந்திரோபாயத்துடன் ஏற்றுக்கொண்டனர். இதேயுதவி 80ம் ஆண்டிலும் காட்டர்நிர்வாகத்தினால் 75மில்லியன் டொலர்களாக்கப்பட்டது.





இது இவ்வாறு தொடர்ந்து கொண்டு இருக்கையில் சண்டினிஸ்டுகளுக்கு எதிரான சக்திகளை ஊட்டி வளர்க்கத் தொடங்கியது அமெரிக்கா. இதற்கு பக்கபலமாக கொண்டுராஸ்(Honduras) நாட்டை தளமாக்கிக் கொண்டது. ஆமாம்! சுமார் பத்து வருட உள்நாட்டு யுத்தத்திற்கான ஆரம்பத்தை அமெரிக்கா தோற்றுவித்தது. சண்டினிஸ்டஅரசாங்கத்தையும், நிக்கரக்குவாவையும் பொருளாதாரரீதியாகவும், இராணுவரீதியாகவும் தாக்கும்

நோக்குடனும் சோசலிச அமைப்பை சீர்குலைக்கும் நோக்கடனும் அமெரிக்கா தனது திட்டத்திற்கு துருப்புச்சீட்டாக 'கொன்ரா'(Contras) என்னும் இயக்கத்தை ஊக்குவிக்கத்தொடங்கியது. ஆமாம்! இன்று அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும், சண்டினிஸ்டுகளால்தான் நிக்கரக்குவாவு

www.tamilarangam.net

ம் அதன் பொருளாதாரமும் கட்டிச்சுவரானது என்று முழக்கமிட்டுக்கொண்டிருக்கும் இந்நிலையில் சில உண்மைகளை அவர்கள் புதைக்க முற்படுகிறார்கள். சண்டினிஸ்ட எதிர்ப்புப்படையான அமெரிக்க தத்துப்பிள்ளை,கொன்ராவினால் நாட்டையும் பொருளாதாரத்தையும் சண்டினிஸ்டுகளையும் அழிக்க முற்பட்டுக்கொண்டிருந்தது அமெரிக்கா. பத்து வருட சண்டினிஸ்ட-கொன்ரா யுத்தத்தில் சுமார் முப்பதினாயிரம் மக்களின் உயிர் இழப்புக்கும், ஐம்பதினாயிரம் மக்களின் இடம் பெயர்வுக்கும் அமெரிக்காவும் முக்கிய காரணம்.

காட்டர் நிர்வாகம் வெளியேறி ரேகன் நிர்வாகம் அரசை ஏற்றபோது ஏற்கனவே சண்டினிஸ்ட அரசுக்கு வழங்கிவந்த உதவிகளை நிறுத்தியது. அன்றிலிருந்து ரேகனால் விடுதலைப் போராளிகள் என அழைக்கப்பட்ட கொன்ராகூலிப்படைக்கு பொருளாதார இராணுவ உதவிகளை ரேகன் நிர்வாகம் தாராளமாக வழங்கத்தொடங்கியது. ரேகனும் அவரது சகாக்களும் காங்கிரசுக்கு தெரியாமல் கொன்ராபய[ங்]கரவாதிகளுக்கு மேலதிகமாக பணஉதவி செ[ய்]தமைக்காக குற்றவாளிக் கூண்டில் நின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. காங்கிரசின்அனுமதியுடன் 81ம்ஆண்டு 19மில்லியன் டொலர் உதவிகளும், 82ல் காங்கிரஸ் 19 மில்லியனும் CIA 10மில்லியனும் உதவிகள் வழங்கின. 83,85,86,87,88,89ம் ஆண்டுகளில் முறையே 24,27,100,24,43,50மில்லியன் டொலர்கள் பெறுமதியான உதவிகளை அமெரிக்கா அள்ளிவழங்கியது. இப்படியாக கொன்ராபயங்கரவாதிகளை சண்டினிஸ்டுகளுக்கு எதிராக வளர்த்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

து இராணுவமயமாக்கி நிக்கரக்குவாவின் பொருளாதாரத்தையும் மக்களையும் அழித்த அமெரிக்கா இன்று நிக்கரகுவாவின் பொதுத்தேர்தலின் பின்னர் நிக்கரகுவாவில் ஜனநாயகம் மலர்ந்து விட்டது, சண்டினிஸ்டுகள் ஆட்சியில் ஜனநாயகம், பொருளாதாரம் சீர்குலைந்தது எனத்தம்பட்டம் அடிக்கிறது.

சண்டினிஸ்டுகள் நினைத்திருந்தால் தாங்களே நிக்கரக்குவாவின் ஆட்சியினை தொடர்ந்து நடத்தியிருக்கமுடியும். ஏனெனில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு அவர்களுக்கு இருக்கிறது. எனினும் மக்கள் தமது தீர்ப்பை வழங்க ஒரு பொதுத்தேர்தலை அவர்கள் ஜனநாயக வழியில் ஏற்றுக்கொண்டனர். மக்களிடம் நம்பிக்கை கொள்ளாத எதிர்க்கட்சிகளுக்கு பொதுத் தேர்தல் செலவாக மில்லியன் டொலர்களாக அள்ளி வழங்கியது அமெரிக்கா. அப்பணத்தை மக்கள் மத்தியில் அள்ளி வீசின எதிர்க்கட்சிகள். இதனால் தேர்தல் பிரச்சார காலங்களில் எதிர்க்கட்சிகளுக்கும் சில சண்டினிஸ்டுகளுக்கும் இடையில் சில அசம்பாவிதங்கள் கூட நிகழ்ந்தன. சண்டினிஸ்டுகளுக்கு எதிராகச் சேர்ந்த எதிர்க்கட்சிகள் NATIONAL OPPOSITION UNION(U.N.O.) தேசியஎதிர்க்கூட்டணி என்ற பெயரில் பொதுத்தேர்தலில் நின்றன. இன்று அமெரிக்காவும் முதலாளித்துவ சக்திகளும், சண்டினிஸ்டுகளுக்கு மக்கள்ஆதரவு இல்லையென்றும் தேர்தலில் மக்கள் சண்டினிஸ்டுகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்கி விட்டார்கள் என்றும் கொட்டமடிக்கிறது. பதினான்கு கட்சிகள் சேர்ந்து(UNO) தேர்தலில் சண்டினிஸ்டுகளுக்கு எதிராக நின்ற போதும், 41%வாக்குகளை தனிக்கட்சியாக நின்று பெற்றிருக்கிறது FSLN. அதுமட்டுமல்லாமல் நாட்டின்91 தொகுதிகளில் 38ஐ கைப்பற்றி நிக்ரக்குவாவின் ஒரேயொரு தனிப்பெரும் கட்சியென்பதை FSLN நிரூபித்துள்ளது. மக்களில் பெரும்பான்மையானவர்கள் இன்றும் சண்டினிஸ்டுகளை 'சமூகமாற்றவியலாளர்கள்' (Social Reformers) என நம்புகிறார்கள். அது மட்டுமல்லாமல் நாட்டின் சண்டினிஸ்டுகளைக் கொண்ட 70,000 இராணுவமும் மத்திய அமெரிக்காவில் மிகப்பலம் வாய்ந்த ...

மாகவுள்ளது. எனவே அமெரிக்கா எண்ணியது போல சண்டினிஸ்டுகளை முற்றாக ஒழிக்கும் கனவு பலிக்கவில்லை. ஆட்சிக்கு வந்த UNO கூட்டு 70,000இராணுவத்தை 40,000ஆக மாற்றியமைப்பது மட்டுமே அவர்களால் முடிந்த பலக்குறைப்பா



'கொன்ரா' (Contras) கூலிப்படை.

கம்.

தற்போது நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஏற்றிருக்கும் வியோலெற்றாஷமோறோவின்(VIOLETA SHAMORRO) இருபிள்ளைகள்(மகனும், மகளும்) தீவிர சண்டினிஸ்ட உறுப்பினர்கள். ஷமோறோ 79ல் ஒட்டேகா அரசாங்கத்துடன் இருந்து பின்னர் கருத்து வேறுபாட்டினால் (மாக்சிச ந



தோழர் ஒட்டேகாவுடன் இன்றைய ஜனாதிபதி திருமதி ஷமோறோ பத்திரிகையாளருக்கு பேட்டியளிக்கும் காட்சி.

ம்பிக்கையின்மை) வெளியேறியவர். அன்றிலிருந்து அவரின் பிள்ளைகள் அவருடன் மனத்தாங்கலி... இன்று வரை அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாயுடன் கதைப்பதில்லை. ஷமோறாவின் கண வர், சோமோஷா ஆட்சியில் கொல்லப்பட்டது மக்கள் மத்தியில் சாதாரண அனுதாபமாகவி ருந்தது. அவரது கணவர் 'LA PRENSA' என்ற பத்தி ரிகையை நடத்தி வந்த காலத்தில் அரச கூலி ப்படைகளினால் கொல்லப்பட்டார். அன்றிலி ருந்து 'LA PRANSA' பத்திரிகையைஷமோறாவே ந டத்தி வந்தார். திருமதி ஷமோறா இன்று எல் லாவற்றுக்கும் அமெரிக்காவையே நம்பியிருக் கிறார். புஷ் நிர்வாகத்திடம்(அமெரிக்கா) ஷ



தேர்தலின் பின் FSLN ஆதரவாளர்கள் மத்தியில் தோழர் ஒட்டேகா உரையாற்றுகிறார்.

மோறா இரண்டுபில்லியன் டொலர்கள் உதவி கேட்டிருக்கிறார். முதற் கட்டமாக 200மில்லிய ன்களும், இரண்டாவது கட்டமாக(மூன்று வருடங்க ளுக்கு) வருடமொன்றுக்கு 600மில்லியன்களென்று ம் கேட்டிருக்கிறார். அமெரிக்காவும் அதனை வழங்கும் முடிவிலுள்ளது. அமெரிக்கா தாங்கள் தலையிட்டு கொன்றாக்களை ஜனநாயக வழிக் கு கொண்டு வந்ததாக கூறியுள்ளார்கள். 'பிள் ளையையும் கிள்ளி தொட்டிலையும்

கதைக்கான். 80ம் ஆண்டுகளிலேயே கொன்றாவை ஜனநாயக வழிக்கு கொண்டுவந்திருந்தால் நி க்கரகுவாவின் பொருளாதார வீழ்ச்சியையும் தடுத்து, எத்தனையோ மக்கள் உயிரிழப்புக்க ளையும் தடுத்திருக்கலாம். ஆனால் அமெரிக்கா வின் நோக்கமும் திட்டமும் வேறுவிதமாக இருந் தது.

நிக்கரக்குவா ஏற்கனவே ஒரு படிப்பி னையைக் கண்டது. சோமாசாவின் ஆட்சியும் அதனைத் தூக்கியெறிந்த அனுபவமும் நிக்கர க்குவாவுக்கு ஒரு பாடமாகவுள்ளது. ஷமோறா வுக்கும் அவரது கூட்டணிக்கும் அது நினைவிருக் கும். UNO ஆட்சிக்கு வந்த சில காலத்திலேயே, அண்மையில் மனகுவா(MANAGUA) தொழிலாளர்கள் (பெரும்பான்மையானவர்கள் சண்டினிஸ்டாக்கள்) ச ம்பளக்குறைப்பு காரணமாக, சம்பளத்தை கூட்ட ச்சொல்லியும், வேறு தங்கள் கோரிக்கைகளை யும் முன்வைத்துப் போராடி வெற்றி பெற்றார் கள். UNO அரசியாக தொழிலாளர்களின் கோ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிக்கைக்கு ஒத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.நிக்கரகுவாவை அமெரிக்காவுக்கு தாரைவார்க்க UNO முற்படுமாயின் நிக்கரகுவாவில் மீண்டுமொருமுறை புரட்சிவெடித்தே தீரும்.சண்டினிஸ்டாக்கள் நேர்மையான ஜனநாயக வழியில் தங்கள் கட்சியை மேலும் கட்டியெழுப்பி சோசலிச அமைப்பை நிக்கரகுவாவில் மீண்டும் மலரச்செய்து நல்லாட்சி புரிவார்களென்பது அரசியல் நேர்மையாளர்களுக்கும் அவதானிகளுக்கும்,சண்டினிஸ்டாக்கள்மேல் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் நன்கு புரியும். ஏன் அமெரிக்காவுக்கும் அப்பயம் உள்ளது.

* * * * * * * * * * * * * * * * * * * *

## 'இனிப்படமாட்டேன்.'

[redacted]

## வேலுப்பிள்ளை.

[redacted]

மலையக மக்களையும்,மண்ணையும் நேசித்த மக்களுக்காய் அரசியல்,தொழிற்சங்க,இலக்கிய வாதிகளினூடாக பெரும்பங்காற்றிய அறிவும் ஆற்றலுமிக்க சிறந்த சிந்தனையாளர் சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள்,வட்டக்கொடை மடக்கும்புர பகுதியில் கண்ணப்பன் வேலுசிங்கம் என்னும் கங்காணிக்கு மகனாக 1914ம்ஆண்டு பிறந்தார்.நுவரெலியா புனித திருத்துவக்கல்லூரியில் கல்வியை ஆரம்பித்து கொழும்பு நாலந்தாக் கல்லூரியில் படிப்பை முடித்துக்கொண்டார்.1936ம்ஆண்டில் பூண்டுலோயா நகரில் தாகூர்வித்தியாலயம் என்ற பெயரில் தானே பாடசாலையை தானே நிறுவி அதில் தன்னை ஆசிரியராக இணைத்துக்கொண்டு மலையகப் பிள்ளைகளுக்கு கல்வி தொண்டாற்றினார்.இதேகாலகட்டத்தில் பார்தி சங்கம் என்று ஒன்றை வட்டக்கொடையில் நிறுவி மலையக இளைஞர் மத்தியில் சமூகவிழிப்புணர்ச்சி ஏற்பட பாடுபட்டார்.1937ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார்.இவர் 1947ம்ஆண்டு நடந்த முதல் பாராளுமன்றத் தேர்தலில் தலவாக்கொல்லையில் போட்டியிட்டு 11ஆயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றார்.1948ல்மலையக மக்களின் பிரஜா உரிமை,வாக்குரிமை பறிக்கப்பட்ட...

...டிலிருந்து 1946ம்ஆண்டுக்கிடையில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் கட்சிக்கு 60ஆயிரம் உறுப்பினர்களைச் சேர்த்த பெருமை இவருக்குண்டு.1961ல்ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர் தேசியசங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தொழிற்சங்க பணியை ஆரம்பித்தார்.ஸ்ரீ மா-சாஸ்திரி ஒப்பந்தம்,காணிசுவீகரிப்பு போன்றவற்றில் தொழிற்சங்கம் மூலமாக சி.வி.வேலுப்பிள்ளைஆற்றியபணிகளை மலையக மக்கள் என்றும் நினைவுகூருவர்.இத்தனை வேலைப்பழுக்களுக்கும் மத்தியில் இலக்கிய பணிமூலம் மலையக மக்கள்துயரை வெளிக்கொணர பெரிதும் பாடு பட்டார்.தேயிலைத் தோட்டத்திலே பார்வதி போன்ற தமிழ்படைப்புக்களையும் 'தடி காட்டன்' 'போர்ண்டு வேபர்' போன்ற ஆங்கில படைப்புகளையும் இலக்கிய உலகுக்கு தந்த வேலுப்பிள்ளை இறுதிக்காலத்தில் இலக்கியப் பணியிலேயே முற்று முழுதாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டதால் இலக்கிய உலகுக்கு கிடைத்த காலத்தால் அழியாத கருவூலம் 'இனிப்படமாட்டேன்' என்னும் நாவலாகும் .மலையகமக்களின் குருதியும்,வியர்வையும்,அவர்களின் இயக்கமுறல்கள் களும்தான் என்னுடைய எழுத்துக்கு ஜீவநாடியாக திகழ்கிறது என்று கூறியவ வேலுப்பிள்ளை இந் நாவல் மூலம் இதனை நிரூபித்திருக்கிறார்.மக்களின் விடியலுக்காக தம்மை உண்மையாக அர்ப்பணிப்பவர்கள் என்றும் சோர்ந்து விடாது ஏதாவது ஓர்வடிவத்தில் மக்களுக்காக உழைப்பார்கள் என்பதற்கு,ஆசிரியராக,அரசியல் வாதியாக,தொழிற்சங்க வாதியாக,இலக்கிய கர்த்தாவாக பணியா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இணைப்புக்கு ஒரு ஆப்பு

புததிரன்

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தினை நசுக்குவதற்கு,பின்னடையச் செய்வதற்கு,குழப்புவதற்கு காலத்துக்கு காலம் இனவெறி அரசுகள் முயன்று வந்திருக்கின்றன.சர்வதேசநெருக்கடிகள் ஏற்படும் போது தீர்வொன்றுக்கு இறங்கி வருவது போல் நடித்து இழுத்தடித்து குழறுபடிகள் செய்து பின்னர் கைவிடுவது தமிழ்பேசும்மக்களின் அரசியல்வரலாற்றில்ஒன்றும் புதியவிடயமல்ல.அதுவும் குறிப்பாக ஐரோப்பிய உதவி வழங்கும் நாடுகளின் நிதிஉதவியைப் பெறும் காலகட்டங்களில் சமாதானப்பிரியர்களாக தம்மைக் காட்டிக் கொள்வது,அரசியல் தீர்வொன்றுக்கான புதியயோசனைகளை முன்வைப்பது எல்லாம் அரசியல் அக்கறையாளர்கள் அறிந்த விடயங்களாகும்.இவ்வண்ணம் இவர்கள் வைக்கும் அரசியல் தீர்வென்று சொல்லிக்கொள்ளும் புதியயோசனைகளானது தமிழ்பேசும் மக்களின் அரசியல் தலைமைகளால்ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது,அல்லது தீர்வுக்குவரமுடியாதபடி பலசிக்கல்கள் நிறைந்தது என அரசு கணிப்பிட்டே முன்வைக்கப்படுகின்றது.இதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க தமிழ்பேசும் அரசியல் தலைமைகளுக்கு அக்கறையில்லை.இவர்கள் வெறுமனேஆயுதப்பிரியர்கள்,இவர்களுக்குள் ஒற்றுமையில்லை அதனால் தான் இந்தநிலை என்றுவெளி உலகுக்கு காட்டி தம்மைநல்ல பிள்ளையாக தம் பட்டம் அடித்துக் கொள்ளும் யுக்தியை பலமுறை இனவெறி அரசுகள் கையாண்டுள்ளன.

அண்மைக்காலத்தில் அப்படி முன்வைக்கப்பட்ட ஒருயோசனைதான் மாகாணசபை மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாணப தென்பதாகும்.இதைஇயக்க[illegible]

சபைஅமைத்து மக்களை ஆட்சிசெய்யுமளவுக்கு இவர்களுக்குள் யாருக்குமே தகுதியில்லை என தப்புக்கணக்குப் போட்டு இதை முன்வைப்பதன் மூலம் தாம் விரும்பினாலும் இவர்கள் வழிக்கு வருகிறார்கள் இல்லை என்று உலகுக்கு காட்ட[illegible] ஆர்.போட்டதிட்டம் எமது இளம் தலைமைகளால் பொடிப் பொடியாக்கப்பட்டது.மாகாணசபைதேர்தல் நடாத்தப்பட்டு மாகாண அரசு அமைக்கப்பட்டபோது அதிர்ச்சி அடைந்தஅரசு அதிகாரப்பரவலாக்கலில் இழுத்தடிப்பு செய்ததோடல்லாமல் புலிகளைக் கொண்டே அமைக்கப்பட்ட மாகாணஅரசை இயங்காமல் செய்யவழிசமைப்பித்தது.ஆயினும் இன்றுவரை மாகாணசபைமூலம் அதிகாரம் பரவலாக்கப் படுவதூடாக தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதைத்தவிர வேறு புதிய யுத்திகளை எந்த அரசியல் தலைமைகளும் முன் வைக்கவில்லை என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய தொன்றாகும்.

இவ்வாண்டு அர்த்தமற்ற யுத்தத்தை புலிகளும்-அரசும் தொடுத்துக்கொண்டதன் மூலம் மக்கள் பேரழிவுகளைத்தவிர வேறெந்தலாபங்களையும் ஈட்டாத நேரத்தில் ஐரோப்பிய நிதி வழங்கும் நாடுகளின் உதவி இல்லாமல் போய்விடுமோஎன்று பயந்துகொண்ட பிரேமதாசா[illegible]ட்டம்,மீண்டுமொரு புதியயுத்தியை,தமிழ் பேசும் அரசியல் தலைமைகளால் தீர்வுக்கு வரமுடியாத சிக்கலான திட்டத்தை அரசியல் தீர்வுக்கு திறவுகோல் என்று சொல்லி முன்வைத்தது. பிரேமதாசாவினால் வெறும் இழுத்தடிப்புக்காகக்கூட்டப்படும் சர்வகட்சி மாநாட்டில்,வடக்கு,கிழக்கில் வாழும் முஸ்லீம்களினதும்,சிங்களவர்களினதும் பிரச்சனைகளை திருப்திகர[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணைப்புதொடர்பாக ஒரு கருத்தொற்றுமை இ
ருக்கிறதென பிரேமதாசா அறிவித்தார்
தொடர்ந்து அமைச்சர் ஹமீதுதலைமையில் நட
ந்த அரசியல் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில்
அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அல
கொன்றையிட்டு தமிழ் முஸ்லிம் கட்சிகளுக் கி
டையே கருத்தொற்றுமை ஏற்படுவதானது பிர
ச்சனையின் தீர்வுக்கான நடவடிக்கையின் முதல்
படிஎன்று தெரிவிக்கப்பட்டது.அதாவது இணை
ப்புக்கான இறுதி முடிவுபற்றியோ அதிகாரப்
பரவலாக்கலை பூரணத்துவப்படுத்துவதற்கோ
நாங்கள் தயார் ஆனால் நீங்கள் ஒற்றுமையாய்
இல்லை என்றே நாகரீகமாககூறப்பட்டது.இதன்
உள்நோக்கம் தமிழ்கட்சிகள் தங்களுக்குள் ஒற்
றுமைப்படுவதில்லை.தமிழ்-முஸ்லிம் கட்சிகளி
ன் ஒற்றுமையென்பது வெறும் பகற்கனவு.ஆகவே
தீர்வுக்கு இவர்களே தடையாய் உள்ளார்கள் எ
ன்று உரக்கச்சொல்லிஐரோப்பிய நாடுகளின்
உதவிப்பணத்தை பெற்றுக்கொள்ளலாம் என்னு
ம் கற்பனையிலேயே இத்திட்டம் முன்வைக்கப்ப
ட்டது.

ஆனால் நடந்தது என்ன?

திரும்பத் திரும்ப பேசுவதன்மூலம் ஒருஇணக்க
ப்பாட்டுக்கு வரமுடியுமென்று நம்பிய நமது இ
ளையதலைமுறைகள் ஒற்றுமைக்கான வழிகளைக்
கண்டறிய கூடிப்பேசினார்கள்.முஸ்லிம்மக்கள்
முன்னிலையில்வைப்பதற்கான அதிகாரப்பரவ
லுக்கான கருத்தொற்றுமை தமிழ்கட்சிகளுக்கி
டையில் ஏற்படுவது ஒன்றிணைந்த ஐக்கியத்தி
ற்குசிறந்த வழிஎன முதலில் தீர்மானித்தனர்.

தமிழ்கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்ட
ணி,ஈழ மக்கள் ஜனநாயக கட்சி,தமிழீழவிடு
தலை இயக்கம்,ஈழத்தேசிய ஜனநாயவிடுதலை
முன்னணி,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்
னணி,ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி,அ
கில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய ஏழுகட்
சிகளும் கூடிப்பேசினர்.இதில் தமிழ் காங்கிர
ஸ் தவிர்ந்த ஏனையகட்சிகள் ஒன்றிணைக்கப்ப
ட்ட வட-கிழக்கு மாகாணங்களுக்குள்

கா சுதந்திரக்கட்சியுடனிணைந்திருந்த கால
த்தில் ஏற்பட்டஜனநாயக மக்கள் கூட்டணி என்
னும் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட முஸ்லிம்
மக்களுக்கு தனி மாகாணம் அமைக்கப்படவே
ண்டுமென்பதாகும்.இது பழையபடி ஒற்றுமைக்கு
முட்டுக்கட்டையாகியது.முஸ்லிம் கட்சிகளான
முஸ்லிம்காங்கிரஸ்,முஸ்லிம்லீக்,முஸ்லிம் ஐக்கிய
விடுதலை முன்னணி ஆகிய முஸ்லிம் கட்சிகளும்
முஸ்லிம்களுக்கு தனிமாகாணம் தேவை.வடக்கு-
கிழக்கு இணைப்புக்கு எமது ஆதரவு தேவையா
யின் முஸ்லிம் மாகாணத்திற்கு தமிழ்கட்சிகளி
ன்ஆதரவைக் கொடுக்க வேண்டும் என்று கூறிப்
பிரச்சனையைச்சிக்கலாக்கி அரசின் பக்கம்
வெற்றி போவதுபோன்ற தோற்றத்தை ஏற்ப
டுத்தினர்.

இளம் தலைவர்கள் சோர்ந்து விடவில்லை மீண்
டும் மீண்டும் பலசந்திப்புக்களை ஏற்படுத்தி த
மிழ் காங்கிரசை ஒருவழிக்குக் கொண்டு வந்
து முதலில் தமிழ்கட்சிகளுக்கிடையிலான முஸ்
லிம் மக்கள் பற்றிய கருத்தொற்றுமையில் முத
ல் வெற்றியைக் கண்டனர். இணைந்த மாகாண
த்தில் சிங்கள,முஸ்லிம்மக்களுக்கு அரசியலமை
ப்புரீதியான பாதுகாப்பினை வழங்கும் ஒரு ச
பையைக் கொண்டிருக்கவேண்டும் என்பதை,TULF
உடனும் LTTEஉடனும் முஸ்லிம் ஐக்கிய முன்னணியும்
முஸ்லிம் லீக்கின் ஒரு பகுதியினரும் இதனை ஒத்
த அல்லது இதற்குக்குறைவான அனுகூலங்களுக்கா
க உடன்படிக்கை செய்துள்ளமையால் தாம் ஏற்
றுக்கொள்வதாக நொண்டிச்சாட்டுச் சொல்
லிக்கொண்டு தமிழ்காங்கிரஸ் ஒத்துப் போ
னது.

இதேவேளை முஸ்லிம் மாகாணம் பற்றி தமது ஆ
தரவினைப்பெறுவதற்கு முஸ்லிம் கட்சிகள் சிங்
களத்தலைமைகளிடம் போயின.

இவர்களிடம் ஸ்ரீ மாவோ கருத்துத் தெரிவிக்
கையில் கிழக்கில் முஸ்லிம் கிராமங்கள் ஒரே
தொடராக இல்லாதிருப்பதால் முஸ்லிம்மாகா
ணசபை பற்றிசில கருத்துக்கள் கொண்டிருப்
...யும்,தனிமாகாணம் அமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீனேன் கருத்துத் தெரிவிக்கையில் வடக்கும்-கிழக்கும் தனித்தனி இயங்கவேண்டும். முஸ்லீம் மாகாணசபை நியாயமற்றது என தெரிவித்தார்.

முஸ்லீம் மாகாணசபையானது அம்பாறையைத்தளமாகக்கொண்டு மன்னார்,முசலி,எருக்கலம்பிட்டியை உள்ளடக்கியதென முஸ்லீம் கட்சிகள் தெரிவித்து ஒற்றுமைக்க வர முரண்டுபிடித்தன. இவைநடந்து கொண்டிருக்கும் போது இவற்றைப்பற்றி எதுவுமே அலட்டிக்கொள்ளாது,அர்த்தமற்றமக்கள் அழிவுகளை மொசாட்டின் ஆசீர்வாதத்தோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கும் LTTEயினர் மொசாட்டின் உதவிகளுக்குதாம் செய்யும் கைமாறாக மொசாட்டின் வேண்டுகோளின்படி வடக்கு-கிழக்கிலிருந்து முஸ்லீம்களை விரட்டி அடித்தனர்,படுகொலைசெய்தனர். இது LTTEஇனரின் முஸ்லீம்கள் பற்றிய நிலைப்பாடாகஇருந்தது. விவசாய ஆராய்ச்சிக்காக வந்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டு இலங்கைக்கள் புகுந்த சர்வதேசப் பயங்கரவாதிகளான மொசாட்டினரின் இராணுவ ஆலோசனை களின் பேரில் இலங்கை இராணுவம் கடந்தகாலங்களில் தமிழ்பேசும் மக்களை கொன்றுகுவித்ததும்,இலங்கையரசு வெளியேற்றுகிறேன் என்று நாடகமாடியதும்,இப்போது மொசாட்டினரின் இராணுவ ஆலோசனைகளின்பேரில் இலங்கை அரசு எதிர்பார்க்கும் தமிழ்பேசும் மக்களைகொன்று குவிக்கும் கைங்காரியத்தைLTTEயினர் செய்து வருவதும்,தமிழ்பேசும் மக்களின் பலத்தைக் குறைக்க வழிசமைக்கும் நடவடிக்கையாக முஸ்லீம்களை LTTEயினர் விரட்டியடிப்பதும்,எத்தகைய உறவுமுறைகள் என்பதையும்,LTTEயும் இலங்கையரசும் பேசுங்காலங்களில் அதனை LTTEயின் தந்திரோபாயம் என்று நம்புபவர்களின் சிந்தனைக்குரிய விடயங்களாகும். சர்வதேசரீதியில் தமது எதிரியாக கருதும் முஸ்லீம்மக்களை படுகொலை செய்ய உதவிவரும் இஸ்ரேல் மொசாட்டினர் விடுதலைப்போராட்டங்களை நசுக்கிவரும் அமெரிக்காவின் செல்

த்தை மறுத்து வரும்,பலஸ்தீன எல்லைகளை தொடர்ந்து ஆக்கிரமித்து வரும் சியோனிஸ்டுகளே பயங்கரவாதி இஸ்ரேலியர் என்பது நாடறிந்தவிடயம். நமது சுதந்திரம் மறுக்கப்படுவது நியாயமென கருதிய அமெரிக்கா தனதுதாசர்களான இலங்கை இனவெறியரசுக்கு ஆலோசனை வழங்க .மொசாட்டினரை அனுப்பிவைத்தது. இன்றுஇந்த மொசாட்டினரின் ஆலோசனையில்LTTEயினர் இயங்குவதும்,முஸ்லீம்களை விரட்டுவதும் விடுதலைப் போராட்டமா?என்பதும் அமெரிக்கா-இஸ்ரேல்-இலங்கையரசு-LTTE இவர்களுக்கிடையில் உள்ள சங்கிலித் தொடரின் மர்மம் என்ன?என்பது நாமறியவேண்டிய விடயங்களாகும்.

வடக்கு-கிழக்கில் முஸ்லீம்மக்கள் LTTEஇனரால் விரட்டி அடிக்கப்படுவதானது முஸ்லீம் மாகாணம் கேட்டதன் விளைவேஎன ரஞ்சன்விஜேரத்ன கூறிவைத்தார்.

வடக்கு-கிழக்கில் முஸ்லீம் மக்களின் வெளியேற்றம் அரசியல் முதிர்வற்றோரின் முஸ்லீம்மாகாண கோரிக்கையின் பிரதிபலிப்பு என முஸ்லீம் இயக்கங்களின் தேசிய அமைப்பு கருத்து தெரிவித்தது.

யு.என்.பி.யில்உள்ள முஸ்லீம் தலைவர்கள் தென்பகுதியில் வாழும் முஸ்லீம்களை ஒன்றிணைத்து உருவாக்கியதே முஸ்லீம் இயக்கங்களின் தேசியஅமைப்பு.

இவர்களின் கருத்துக்கு பதில் தெரிவித்த முஸ்லீம்காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்.நமது முஸ்லீம் மாகாணசபை கோரிக்கை அம்பாறை,மன்னார்,எருக்கலம்பிட்டி,முசலியை உள்ளடக்கியதே ஆனால் யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து ஏன் விரட்டியடிக்கப்பட்டனர். ஆகவே இக்கருத்து அர்த்தமற்றது என்றார்.

இந்நிலையில் இணைப்பு பற்றி கருத்தொற்றுமைகொண்ட தமிழ்கட்சிகள் முஸ்லீம் கட்சிகளுடன் தொடர்ந்து பேசின. எமக்குள்ளபிரச்சனைகளை அரசு தனக்கு சாதகமாக்க கூடாது.நா

www.tamilarangam.net

[illegible] விளக்கப்பட்டு முதலில் முஸ்லீம் கட்சிகளுடனான,முஸ்லீம் மக்கள் பற்றிய தீர்வுக்கு வருவதும்,பின்னர் வட-கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் பற்றிய தீர்வுக்கு நாம் ஒன்றிணைந்து சிங்களக் கட்சிகளுடன் பேசுவோம் என்றும் தீர்மானத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டு தொடர்ந்து கூடிப்பேசினர்.

இப் பேச்சு வார்த்தைகளின் தொடர்பாக இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையும்,தமிழ்முஸ்லீம் பிரதேசசபைகள் இரண்டு அமைப்பும், இப்பிரதேச அமைப்புக்களுக்கான பாதுகாப்பு, கல்வி,அபிவிருத்தி தொடர்பான அதிகாரங்கள் வழங்கிட கூட்டுத்தொடரில் பங்கு பற்றிய அனைத்து தமிழ்,முஸ்லீம் கட்சிகளும் இணக்கம் கண்டன.புரிந்துணர்வின் அடிப்படையில் முஸ்லீம் மாகாணசபை கோரிக்கையை கைவிட்டு ஒரு கருத்தொற்றுமை கொண்டதீர்வுக்கு முஸ்லீம் கட்சிகளை வர இணங்கச் செய்தமையானது தமிழ் கட்சிகளின் பெரும் வெற்றியும்,தமிழ்பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில் வரலாற்று முக்கியம் வாய்ந்த இரண்டாவது சம்பவமுமாகும்.(முதலாவது தமிழ்பேசும் மக்களுக்கான தனியான மாகாணஅரசை நிறுவியது.)

இந்நிலைப்பாட்டில் கருத்தொற்றுமை காணும் முயற்சிகளில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் திருச்செல்வமும்,காங்கிரஸ் சார்பில் குமார் பொன்னம்பலமும்,ஜனநாயக மக்கள்விடுதலை முன்னணிசார்பில் சித்தார்த்தனும்,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரனும்,தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் கே.கருணாகரனும் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் அஷ்ரப்பும்,முஸ்லீம் ஐக்கிய முன்னணி சார்பில் மொஹிதீனும் ,முஸ்லீம் லீக் சார்பில் மசூர் மௌலானாவும் மிகவும் பொறுப்புடன் நடந்து கொண்டனர்.

தொடர்ந்து வந்த பேச்சு வார்த்தைகளில் இத்தீர்மானம் அலசி ஆராயப்பட்டு செழுமைப் படுத்தப்பட்டு இறுதியாக [illegible]

மும் பிரிவுகளும்,வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபைக்குள் வரும்.தமிழ் மக்களும்,முஸ்லீம் மக்களும் சரிசமமாக வாழும் உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு,தமிழ் மக்கள் பிரிவுகள் மாகாணசபைக்குள்ளும்,முஸ்லீம் மக்கள் வாழும் பிரிவுகளும்,ஏனைய முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் உதவி அரசாங்க பிரிவுகளும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு பிரதேசஅமைப்பு அமையும்என்றும் தீர்மானத்திற்கு வந்துள்ளன.

இத்தீர்மானமானது வெற்றிபெறும் என பிரேமதாசா கூட்டம் கனவிலும் எதிர்பார்க்க வில்லை.அவர்களுக்கு இது பெரும் அதிர்ச்சியை கொடுத்ததோடு அரசின் சாணக்கியத்தை வெல்லக்கூடிய திறமை படைத்தஇராஜதந்திரிகள் தமிழ் பேசும் மக்களின் இளம் தலைவர்களுள் இருக்கிறார்கள் என்பதை மீண்டும் மீண்டும் நிருபித்தது.ஆயினும் இவர்கள் நடாத்தியபேச்சுவார்த்தைக் காலங்களை தனக்கு சாதகமாக்கி இலங்கையரசு ஐரோப்பிய உதவி பெறும் நாடுகளிடமிருந்து பெரும் தொகையான பணத்தை பெற்றுக்கொண்டு தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டது.

ஆகவே மீண்டும் வெற்றி பெறமுனைந்த இத்தீர்வினை முறியடிக்க அரசு தனது சகாக்களைஏவியது.இதில் முக்கிய பலிக்கடாவாக ஒரு பகுதியில் யு.என்.பி.யைச் சேர்ந்த சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச்.முகமது நிறுத்தப்பட்டார்.மறு பகுதியில் முஸ்லீம் கட்சிகளுக்குள் உடைவை ஏற்படுத்த,தமிழ்பேசும் மக்கள் எடுக்கும் தீர்மானங்களுக்கு குழப்பத்தை விளைவிக்க இலங்கையரசினால் பாவிக்கப்பட்டு வரும் முஸ்லீம் லீக்கின் முக்கியஸ்தரான மசூர் மௌலானா நிறுத்தப் பட்டார்.

அல்ஹாஜ் முகமது பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் முஸ்லீம் இயக்கங்களின் தேசியசபைமாநாடு என்று ஒன்றைக் கூட்டினார்.இதில்யு.என்.பி.முஸ்லீம்களும்,அஹ்ரா,திருமதி ராஜமனோகரி புலேந்திரன்,திவ்வியநாதன்,தினே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible] வடக்கு கிழக்கு இணைப்பை நாம் என்றும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை, வடக்கின் ஆக்கிரமிப்பிலிருந்து கிழக்கைப் பாதுகாக்க கிழக்கு மாகாண ஐக்கிய முன்னணி உருவாகும் என தெரிவித்தார்.

அநுரா பேசுகையில் இரு பெரிய தேசிய கட்சிகளும் முஸ்லீம் மக்களின் நம்பிக்கையை பெறத்தவறியதும், வடக்கு கிழக்கு இணைப்புமே முஸ்லீம்கள் மத்தியில் இனவாத அரசியலை தோற்றுவித்துள்ளது என்றார்.

மறுபுறத்தில் தமிழ் முஸ்லீம் கட்சிகளின் ஒன்றிணைந்த தீர்மானத்தை பிரேமதாசாவிடம் கையளிக்குமுன் முஸ்லீம் லீக் கட்சி இத்தீர்மானத்தில் தமக்கு இசைவில்லையென கூறிச்சறுக்கிக்கொண்டது.

இக்கருத்து வெளியீடுகள் இப்பிரச்சனையை இழுத்தடிப்பதற்கு பிரேமதாசாவுக்கு கிடைத்த போதுமான நொண்டிச்சாட்டுகளாயினும், முஸ்லீம்மக்கள் மத்தியில் பரந்துபட்டு பிரதிநித்துவப்படுத்தக்கூடிய ஒரே கட்சியாக விளங்கும் முஸ்லீம் காங்கிரஸ் இத்தீர்மானத்துடன் ஒத்துப் போவதானது கணிக்கப்படவேண்டிய ஒன்றாகும். கடந்த காலங்களில் தமிழ் கட்சிகளும், பின்பு இயக்கங்களும், முஸ்லீம் மக்களுடன் நடந்துகொண்டமுறைகளும், தெளிவான தீர்வுகளை அதிக கட்சிகள், இயக்கங்கள் முன்வைக்காததும், முஸ்லீம்கள் தங்களுக்கு ஒரு அரசியல் கட்சியை உருவாக்க வைத்தது. கடந்த காலங்களில் LTTEஇனர் முஸ்லீம்மக்கள் மீது ஏற்படுத்திய தாக்குதல்கள், மாகாணசபைக்காலத்தில் முஸ்லீம்கள் தாக்கப்பட்டமை, இப்போது தமிழீழம் தமிழ்மக்களுக்கென்னும் பாணியில் LTTEஇனரால் முஸ்லீம் மக்கள் வடக்கு-கிழக்கிலிருந்து விரட்டியடிக்கபடுவதும் முஸ்லீம்மக்கள் தங்களுக்கான பாதுகாப்பு, உத்தரவாதத்தை அரசியல் ரீதியில் பெற முனைய வைத்துள்ளது. இது நியாயமானதும் கூட. அன்று முஸ்லீம் மக்களைப் பற்றிய தெளிவான தீர்வை முன் வைத்தவர்களே இன்று தமிழ்-முஸ்லீம் கட்சிகளின் ஒற்றுமைக்கும் [illegible]

[illegible] பாடு படுளார்கள் என்பது வெளிப்படை.

தமிழ்கட்சிகளிடத்தில் ஒற்றுமையேற்பட்டுள்ளதாயினும் அது பூரணப்படுத்தப்படவில்லை. இலங்கையரசின் சதிகளுக்கெதிராக ஒன்றிணையும் இவர்களுள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி(EPDP) தமிழீழ விடுதலை இயக்கம்(TELO), தமிழீழ விடுதலைக்கழகம்(PLOT) ஆகியவை புலிகளைக் காட்டிக்கொடுக்கிறோம் என்று கூறிக் கொண்டு பொது எதிரியின் இராணுவமுகாம்களில் தங்கிஇருந்து ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இவ்வேளையில் லண்டனில் இலங்கையரசுக்கும்(LTTE) இருக்கும் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. இவர்கள் இருவரும் மீண்டும் ஒன்றிணைந்தால் இப்

**தமிழ்பேசும்மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கியதான, இணைந்த மாகாணஅமைப்பு முறையே இலங்கைத்தீவின் நிரந்தர அமைதிக்கு திறவு கோலாகும்.**

போது இலங்கையரசுக்கு ஆதரவு வழங்கும் இயக்கங்களை இதே இலங்கை இராணுவத்தின் உதவியுடன் (LTTE) அழிக்கமாட்டாது என்பதில் என்ன நிச்சயம். அதுபோக நாம் யாருடன் கூட்டுச் சேரவேண்டும் என்பதில் இயக்கங்கள் தவறுவது எதிர்காலத்தில் தமிழ்பேசும் மக்களின் தீர்வுக்கதாம் முட்டுக்கட்டையாக இருக்க நேரிடும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.


தமிழ்-முஸ்லீம் கட்சிகளின் ஒற்றுமையானது வலுப்பெற்று அரசியல் நெருக்கடியை கொடுப்பதன்மூலம் தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வுகளை மாகாணசபையை ஒன்றிணைத்து அதிகாரங்களைப் பெறுவதினை முதல்படி வெற்றியாககொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டுமென்பதே தமிழ் பேசும் மக்களின் விடியலில் அக்கறையுள்ள அனைவரது எதிர்பார்ப்புமாகுமென, தமிழ் முஸ்லீம் கட்சிகளும் இயக்கங்களும் [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சந்திரசேகர்

# தாக்குப்பிடிப்பாரா?



சின்னவன்.

பல் இனங்களையும், பல மதங்களையும், பலமொழிகளையும் கொண்ட இந்தியாவில் இன்றுவரை ஜனநாயகம் பேணப்பட்டு வந்திருப்பதானது உபகண்ட மக்களுக்கு பெருமைக்குரிய விடயமாகும். இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளை எடுத்துக் கொண்டால் பர்மாவில், பங்களாதேசில், பாகிஸ்தானில் ஜனநாயகப் போர்வைக்குள் இராணுவச் சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகிறது. இலங்கையில் இராணுவ, ப்பாசிச, ப்பயங்கரவாதம் கொடிகட்டிப் பறக்கிறது. உலகிலேயே ஜனநாயகம் சோதனைக்குட்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் இந்தியாவில் மட்டும் அதிகபட்சம் கட்டிக் காக்கப்படுவதைச் சகிக்கமுடியாத ஏகாதிபத்தியம் தனது கைக்கூலிகள்மூலம் இந்தியாவுக்குள் ஜனநாயக அச்சுறுத்தல்களை ஏற்படுத்த முனைந்துள்ளது. அது பஞ்சாப்பில் தொடங்கி அசாம், காஷ்மீர் என்று வளர்ந்துவிரைவில் தமிழ் நாட்டிலும் தோற்றுவிக்கக்கூடிய நிலையை வளர்த்துள்ளது. இவ்வச்சுறுத்தல் ஆயுதப் போராட்டங்களாக தலையெடுத்துள்ளமைக்கு கடந்த கால ஆளும் வர்க்கங்கள் இம்மாநிலங்களில் இருந்த பிரச்சனைகளை ஆரம்பத்திலேயேபேசித் தீர்க்காது, கவனத்திலெடுக்காது விட்டமையே முக்கிய காரணமாகின்றது. இவர்கள் கவனத்திலெடுக்காததைஏகாதிபத்தியம் கவனமெடுத்து கைக்கூலிகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்து ஊடுருவவிட்டதால் இன்று மக்களுக்கும் ஆளும்வர்க்கங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறி ஏனைய மாநிலங்களுக்கும் பிரிவினை என்னும்பேரில் ஆயுதக்கலாச்சாரம் வேகமாக வளரத்தொடங்கியுள்ளது. இன்றைய இந்நிலைக்கான முழுப் பொறுப்பையும் ஆளும் வர்க்கங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்நிலையில் ஆட்சி அதிகாரத்தையேகை கழுவி விட்டால் போதும் என்று கட்சித் தலைமைகள் நழுவிக்கொண்டிருக்கும் போது

மர் பதவியை மின்னாமல் முழங்காமல் கட்டிப்பிடித்திருக்கிறார். இவர் தாக்குப்பிடிப்பாரா? இவர் வெளியில் இருந்து சொல்லிக் கொண்டதையெல்லாம் உள்ளே வந்து எப்படிச்சமாளிக்கப் போகிறார்? இவரைச் சுற்றியுள்ள ஏனைய கட்சித்தலைவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பது இன்றைய வினாக்களாக எல்லோர் மனதிலும்எழுந்துள்ளது.



வி. பி. சிங்

இந்தியாவின் ஏழாவது பிரதமராகப் பொறுப்பேற்று பதினொருமாதங்கள் இமெத்தடிச்சுளளதையும் சாதிக்க முடியாமல் போனவர். பாம்பென்று தெரிந்தும் அத்வானியை, ராஜிவை ஆட்சிப்பீடம் ஏறவிடக்கூடாது என்பதற்காகதன்னுடன் சேர்த்துக் கொண்டவர். இன்று அத்வானியின் இரத யாத்திரையாலேயே பிரதமர்பதவியை பறிகொடுத்தவர். ஆயினும் அத்வானியின் மதவெறிக் கொள்கைக்கு வளைந்து கொடுத்து தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளாமல் நிமிர்ந்து எதிர்த்து நின்று மறிந்து போனவர் ஆரம்பத்தில் ராஜிவ் ஆட்சி விழுந்தால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

றுசொன்னவர் இதை நடைமுறைப படுத்த ஜனதா க்கட்சியை முடிவிடா நடாத்தி சந்திரசேகரை தன்னுடன் சேர்த்துக்கொண்டு ஜனதா தளம் என் றுபவனி வந்தவர் தான் பிரதமராகப் போவதி ல்லைஎன்று உள்ளுக்குள் சொல்லிக்கொண்டதை ம்பிய சந்திரசேகர் பிரதமர் பதவிக்கு அலை ந்தபோது தேவிலாலை வைத்து தன்னைப் பிரத மராக்கிவித்தவர். இந்த நன்றிக் கடனுக்காக தேவிலாலுக்குத் துணைப்பிரதமர் என்னும் புதி யபதவியை கொடுத்தவர். எந்தப் பதவியுமில் லாமல் போன சந்திரசேகரும் தேவிலாலும் எ திரி களாக அதில் குளிர் காய்ந்தவர். போர் பாஸ்ஊழல் என்று சொல்லி இராஜிவுக்கு எதிரா கப்பிரச்சாரம் செய்த இவர் ஆட்சிக்கு வந்தபி

> இன்று நாட்டுக்கு அவசியமான
> து சிக்கனம். சிக்கனம் என்பது
> வெறும் சுலோகம் அல்ல அது
> பொருளாதாரத் தந்திரோ
> பாயம்.

இவ்வூழல் அம்பலமானால் தானும் தன்னுடன்
ன்இவ்வூழல் அம்பலமானால் தானும் தன்னுடன் சே
ர்ந்துள்ள இராஜிவின் சகாவான அருணநேருவும் கூட இதில் அம்பலப்பட இடமுண்டு என்று தெரிந் துகொண்ட போது ஊழல் விசாரணையை மூடிவை த்தவர். தேவிலாலின் மகன் ஓம்பிரகாஸ் ஹரியா னாமாநில முதல்வராக இருந்து செய்த ஊழல்தி ல்லுமுல்லுகளினால் ஓம்பிரகாசை பதவி நீக்கம் செய்தது தொடர்பாக தேவிலாலைப் பகைத்து க்கொண்டவர். வி. பி. சிங் எழுதியதாக பொய் கடிதம் தயாரித்தது தொடர்பாக தேவிலாலை பதில் பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றி யவர் தூசுப்பிடித்துக் கிடந்த மண்டல கமிஷன் அறிக்கையை நடைமுறைப்படுத்த முன்வந்து பெரு ம்நெருக்கடிகளுக்குள்ளாகியவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு என்று சொல் லி மூன்றுக்கணக்கான மாணவர்களை தீக்குளிக் கவைத்தவர். புள்ளி அடிப்படையில் கல்வியிலும் ன்னுரிமையையும், பொருளாதாரத்தை

த்திமக்களை வழிநடத்துவதையும் விட்டு குறுக்கு வழியில் நாட்டில் சிக்கல்களை தோற்றுவித்த வர். இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் பிரச்சனை யை கருணாநிதியிடம் ஒப்படைத்து விட்டுஎதுவு மேசுலட்டிக் கொள்ளாமல் காலத்தை ஓட்டியவ ர். இன்றைய நெருக்கடிகளிலிருந்து தப்பிக்கொ ண்டால் போதுமென்று பெருமூச்சு விடுபவர்.



இராஜிவ் காந்தி.

தனது ஆட்சிக்காலத்தில் விட்ட பிழைகளைதிரு ம்பிப்பார்த்து சிறிது புத்திசாலித்தனமாக ந டந்து கொள்பவர். ஆயினும் நாட்டின் இன்றையநெ ருக்கடிகளுக்கு பெரும் பங்கேற்பவர். தனது எதி ரியான வி. பி. சிங்கைவெளியேற்ற ஜனதாதள த்தை உடைத்தெறிய சந்திரசேகரைப் பாவித் துவெற்றி கண்டவர். சந்திரசேகருடன் சேர்ந்து ள்ளதேவிலால் எவ்வளவு திறுக்கு தாளப் பேர்வழி என்று தெரிந்தும் வி. பி. சிங்கை ஆட்சி கவிழ்க் கவேண்டுமென்பதற்காக. மக்கள் நல்வாழ்வு. எதி ர்காலம் பற்றி கொஞ்சமும் கவலைப்படாது சந்திரசேகர், தேவிலால் கூட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தவர். 58ஆசனங்களைக் கொண்டசந்தி ரசேகருக்கு 207ஆசனங்களைக் கொண்ட( காங்கி ரஸ் 196+ அ. தி. மு. க. 11) ராஜிவ் ஆதரவு தெரிவி ப்பதேன். ராஜிவ்காந்தி இந்தியப் பாராளுமன் றத்தில் இன்னும் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டவர். இவர் ஆட்சியமைப்பதற்கு சந்திர சேகரின் ஆதரவை பெற்றுக்கொண்டு சந்திர

www.tamilarangam.net

ருக்கலாம். ஆனால் இன்றைய நெருக்கடிகளில் ஜனதா தளம் மீண்டும் முகம் கொடுக்க ராஜீவ்வழிவகுத்திருக்கிறார். ஜனதா தளத்தின் ஒரு பகுதி வி.பி.சிங் மண்கவ்வியாகி விட்டது. மறுபகுதியையாட்சியேற்றி இனி வரும் தேர்தல்களில் ஜனதாதள நாமமே இல்லாமல் செய்ய யோசிக்கிறார் ராஜீவ். அத்துடன் இன்றைய நெருக்கடிகளில்தனது பெயரை உருளாமல் காப்பாற்றிக்கொள்ள ஒரு வழி தேடியிருக்கிறார். ஆனால் மறுபக்கத்தில் வளர்ந்து வரும் பாரதீயஜனதா இவரை என்றும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் என்பதை இவர் நினைவில் வைத்திருக்கிறாரா? எது எப்படியிருப்பினும் இன்று காங்கிரஸ் ஆட்சிதான் நடக்கிறது. ராஜீவ் தான் நல்ல பிள்ளைப்பெயர் எடுத்துக்கொண்டு தனது விருப்பங்களை நிறைவேற்றவும் தனது அரசியல் எதிரிகளை பழிதீர்க்கவும் சந்திரசேகரைப் பாவிக்கப் போகிறார்.



## தேவிலால்.

அன்று வி.பி.சிங்ஆட்சிஏற்றபோது சந்திரசேகருக்கு பிரதமர் பதவி போகக்கூடாது என்று வி.பி.சிங் பக்கம்நின்றவர். இன்று வி.பி.சிங் ஆட்சிகவிழ வேண்டும் என்று சந்திரசேகர் பக்கம்நிற்பவர். அரசியல் தில்லு முல்லுகளின் முன்னோடி. வி.பி.சிங் எழுதியதாக கள்ளக் கடிதம் எழுதி ஜனாதிபதியிடம் கொடுத்த பித்தலாட்டக்காரர். ஹரியானாவில் விவசாயிகள் சம்மேளனம்என்று ஒன்றை வைத்துக்கொண்டு தானும் அ

கி செய்த ஊழல்களை மூடிமறைக்க இந்தியப்பிரதமர் வி.பி.சிங்கையே நிர்ப்பந்தித்த அரசியல்நேர்மையாளர். இவரைக் கட்டிக்கொண்டிருப்பது சந்திரசேகருக்கு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது போல்தான். இவர் இனி

> **இராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்பதை எல்லோரும் விரும்பும் அதேவேளை முஸ்லீம் பள்ளிவாசலை இடித்து விட்டல்ல.**

மேலும் சும்ம இருக்கமாட்டார் ஏதாவது அரசியல்வம்பு தும்புகளில் ஈடுபடுவார். சந்திரசேகர் கண்டித்தால் ஜனதா சோசலிஸ்ட் உடையும். இவர் அத்வானியுடன் சேர்ந்து கொண்டு சந்திரசேகரை கவிழ்க்கமுனைந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏற்கனவே பதில் பிரதமராய் இருந்த இவர் மீண்டும் பதில் பிரதமராய் ஆகியிருக்கிறார். சந்திரசேகர் ஜனதா சோசலிஸ்ட் என்ற கட்சி ஆரம்பித்தபோது தேவிலாலும் அவர்கூட்டாளிகளும் சேர்ந்து ஆதரவு கொடுத்தனர். இதுவெறுமனே வி.பி.சிங்கை விழுத்திதாம் ஆட்சிஏற எடுத்த முயற்சிதான். இதில்தான் சந்திரசேகருக்கு ஆதரவு தெரிவிப்பதானால் தனக்குபிரதமர் பதவியை தரவேண்டும் என்று ஏன் கேட்கவில்லை. இன்றைய நெருக்கடிகளில் வி.பி சிங் பட்ட பாட்டை நேரிலேயே கண்டவர். பிரதமர் பதவியில்மாட்டிக்கொண்டு திண்டாடுவதைவிட பதில் பிரதமராக இருந்து கொண்டு ஏதாவது கையில் பட்டதை ஒதுக்கிக்கொண்டு ஒதுங்கி நல்ல பிள்ளையாக வாழலாம் என்று எண்ணிவிட்டார் போலும்.

## அத்வானி.

அத்வானி ஒரு அணுகுண்டு. இந்தியாவை மதத்தின் பெயரால் சின்னாபின்னப்படுத்த வந்திருக்கும் ஏகாதிபத்தியக் கைக்கூலி. தேவிலாலைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible]
கொமேனி.இந்தியாவை மதத்தின் பெயரால் சீரழிக்கப் போபவர் அத்வானி.பாரதிய ஜன



தாவின் தலைவர்.ஆர்.எஸ்.எஸ் இன் கூட்டு.ராஜிவ்ஆட்சி ஏற்ற போது இரண்டு ஆசனங்களைப் பெற்றிருந்த இவர் வி.பி.சிங் ஆட்சி ஏற்றபோது 86 ஆசனங்களைப் பெற்றிருப்பது கவனிக்காமல்விடக் கூடியஒன்றல்ல. காஷ்மீர்,பஞ்சாப்பிரச்சனைகள் மாநில வாரியான தலையிடிகளைக் கொடுக்கும் அதேவேளை அத்வானியின் இராம ஜென்மபூமி விவகாரம் அகில இந்தியாவையே ஆட்டம் கான வைக்கும் தலையிடியாகும்.

உலகில் அதீத மதநம்பிக்கைகள்,மூடநம்பிக்கைகள் வேகமாக மக்களை ஆட்டிப்படைத்து வருவது ஒன்றும் புதிதல்ல இதற்கு இந்தியாவும் விதி விலக்கல்ல.பெரும் பான்மை கல்வியறிவற்ற மக்களும், மத வெறி கொண்ட பிரிவினரும்,கடவுளின்பெயரால் பயம் கொள்ளும் மக்களும் இந்தியாவிலிருப்பது அத்வானிக்கு சாதகமாக அமைந்துள்ளது.

இந்தியாவின் அரசியலமைப்பில் சகல மத மக்களினதும் உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது.இந்தியா சமய சார்பற்ற ஒரு நாடாகவே இருந்து வந்துள்ளது. பாரதிய ஜனதா தான் ஆட்சிக்கு வந்தால் சிறு பான்மை மதத்தினருக்குரிய(முஸ்லிம் கிறிஸ்தவ

சுதந்திரங்களை,உரிமைகளையும் அரசியல் அமைப்பிலிருந்து அகற்றி விடுவோம் என்று பிரச்சாரம் செய்கின்றனர்.இந்தியா இந்துக்களுக்கே என்று கோஷமிடுகின்றனர்.இதில் இந்து மத வெறியர்களும்,கல்வி அறிவற்ற மக்களும் ஆட்பட்டு போவது வியப்புக்குரியதல்ல.ஆகவே எதிர்காலத்தில் அத்வானி ஆட்சி ஏறுவது கேள்விக்குறியல்ல.இதை உறுதிப்படுத்து முகமாக அயோத்தியில் முஸ்லிம் பள்ளி வாசல் இருக்குமிடம் இராமர்பிறந்த இடம் அங்கே இராமருக்கு கோயில்கட்டவேண்டுமென்று இரத பவனி வருவதும்,இந்தியாமுழுவதும் வீட்டுக்கொரு செங்கல் சேகரிப்பதும்,மக்கள் விழுந்தடித்துக்கொண்டு செங்கல் கொடுப்பதும்,செங்கல் தாங்கி வரும் வாகனத்தை பக்தியுடன் கும்பிடுவதும் கண் கொள்ளாக் காட்சி.இவரின் வருங்காலம் காஷ்மீர்,பஞ்சாப் பிரச்சனை வலுப்பெறுவதோடு கிறிஸ்தவர்கள்தமக்கொரு மாநிலம் வேண்டிப் போராடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.மக்களின் பலவீனங்களை கணக்கெடுத்து வைத்திருக்கு இவர் இப்போதைக்கு வில்லனாக இருந்து தருணம் பார்த்து கதாநாயகனாகத் திட்டம் தீட்டியிருக்கும் ச

> வி.பி.சிங்கை விழுத்துவது என்னும் குறுகிய திட்டத்தைமட்டுமே சந்திரசேகர் கொண்டுள்ளார். எந்தக் கொள்கைத் திட்டமும், கோட்பாடும் இல்லாத இவர்களுடன் ஒன்றுசேர்ந்து பணிபுரிய முடியாது.

னி.பாரதிய ஜனதாவை,காங்கிரஸ் எதிர்ப்பின்மூலம் சந்திரசேகருக்கும் எதிராகவே வைத்திருப்பவர்.இவரின் இன்றைய இராம ஜென்மபூமியைதீர்க்க வழிதெரியாமல் நிற்கும் இன்றையதலைவர்கள் நாளை இந்தியா முழுவதற்குமே மதத்தின்பெயரால் கொடுக்கப் போகும் அதிர்ச்சிவைத்தியத்தைக் கண்டு தலை தெறிக்க ஓடப் போகிறார்கள்.மனித நேயத்தை விட்டு மக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


க்கும்வேர். இந்திய ஒருமைப்பாட்டை குலைக்கமுற்படும் இவர், இந்திய ஆளும் தலைமைக்கு இவரை வரவிடாது அடித்து விரட்டுவதில் ஆளும் வர்க்கங்களும், அனைத்து முற்போக்கு சக்திகளும் விழிப்பாக இருக்க வேண்டும்.

## ஜோதிபாசு.

இந்திய கம்யூனிஸ்ட்டு தலைவர்களில் ஒருவரான ஜோதிபாசு மேற்கு வங்காள முதலமைச்சராக இருக்கிறார். சந்திரசேகர் தான் பிரதமராகுவதற்கு முன்பு ஆதரவு திரட்ட இந்திய முக்கிய அரசியல் தலைவர்களை சந்தித்திருக்கிறார். அப்படி ஜோதிபாசுவைச் சந்தித்த போது சந்திரசேகர் ஜோதிபாசுவை பிரதமராகும்படியும்தனது ஆதரவையும் காங்கிரஸின் ஆதரவையும் தாம் தருவதாயும் கூறியுள்ளார். அதற்கு ஜோதிபாசு மறுத்ததோடு இந்நிலையில் நாம் பிரதமர்பதவியை நமது பலமின்றி ஏற்பது பைத்தியகாரத்தனம். அது சாத்தியமுமில்லை. அந்தப்பாதையில்நாம் செல்லமுடியாது என்று கூறியுள்ளார். இதன்பின் சந்திரசேகர்தான் பிரதமராகும் முடிவை கூறியுள்ளனர். இது பற்றி ஜோதிபாசு பத்திரிகையாளரிடம் கூறியதாவது பிரதமராகப்போகும் சந்திரசேகரிடம் உங்கள் திட்டம் என்ன என்று கேட்டேன். அவர் எதுவித பதிலையும்கூறவில்லை. விஸ்வநாத்சிங்கை விழுத்துவது என்னும் குறுகியதிட்டத்தை மட்டுமே சந்திரசேகர் கொண்டுள்ளார். எந்தக் கொள்கைத்திட்டமும் கோட்பாடும் இல்லாத இவர்களுடன் ஒன்று சேர்ந்து பணிபுரியமுடியாது என்று கூறினார். அத்வானியின் மத வெறிக் கொள்கையை வன்மையாகஎதிர்க்கும் இந்திய கம்யூனிஸ்ட்டுகள் (CPI. CPM) இதற்கான தமது முழுஆதரவையும் வி.பி சிங்கிற்கு வழங்கினார்கள். ஆனால் தேவிலாலின்விவசாயிகள் பிரச்சனையை சமாளிக்க வி.பி.சிங் கொண்டு வந்த மண்டல கமிஷனுக்கு (தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வியில் முன்னுரிமை) அர்த்த மற்ற ஆதரவை வழங்கியுள்ளனர்.

## சந்திரசேகர்.

மீண்டும் ஒரு உத்தரபிரதேஷ் மாநிலத்தவரான சந்திரசேகர் இந்தியாவின் எட்டாவது பிரதமராக பொறுப்பேற்றுள்ளார். மொராஜி தேசாய்தவிர்ந்த ஏனைய ஆறு பிரதமர்களும் உத்தரபிரதேசத்தவரே. சந்திரசேகர் எந்தப் பெரிய பதவியையும் வகிக்காவிட்டாலும் இந்தியப்பிரதமராக வேண்டும் என்ற ஆசையுடனேயே அலைந்து அதை எட்டிப்பிடித்துக் கொண்டவர் இவர் பிரதமர் பதவியில் தீராத ஆசைவைத்திருந்தார். இதற்காக நான் முப்பது வருடங்களாக ஆண்டவனை பிராத்தனை செய்து வந்திருக்கிறேன்என்று திருமதி துஜாதேவி சந்திரசேகர் பத்திரிகையாளருக்கு தெரிவித்துள்ளார். 1957ல் பிரஜா சோசலிஸ்ட்கட்சியின் உறுப்பினரான



கூடன் இவரின் அரசியல் பிரவேசம் ஆரம்பம். பின்புஇந்திரா காங்கிரஸில் இருந்து வந்து 77ல்வெளியேறி ஜனதா கட்சியின் தலைவரானார். ஜனதாவின் இரண்டாண்டு ஆட்சிக்குப்பின் கவிழ்க்கப்பட்டபோது சிறிது காலம் ஒதுங்கியிருந்தார். பின்பு வி.பி.சிங்குடன் சேர்ந்து ஜனதாவை விட்டுவந்து ஜனதா தளம் அமைத்தார். அப்போதும் அவர் எதிர்பார்ப்பு பிரதமர் பதவியிலேயே இருந்தது. அது வி.பி.சிங், தேவிலால் கூட்டால் கைகூடவில்லை. இப்போது ஜனதா தளத்திலிருந்து பிரிந்து ஜனதா சோசலிஸ்ட் கட்சி என்று ஒ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பி.சிங்கை யமுனது பிரதமராகியிருக்கிறார். வாக்கெடுப்பின் போது 280வாக்குகள் ஆதரவாகவும் 214பேர் எதிராகவும் வாக்களித்ததன் மூலம் சந்திரசேகர் தனது பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபித்திருக்கிறார். 11பேர் யாருக்குமேவாக்களிக்கவில்லை. 17பேர் சபைக்கு வரவில்லை. சந்திரசேகரின் 280வாக்குகளில் 196காங்கிரசினுடையது. காங்கிரஸின் கூட்டான அ.தி.மு.கவினது 11வாக்கு. சந்திரசேகர், தேவிலால் கூட்டுக்கு 56வோக்குகள். மிகுதி இவரது ஆதரவு சிறியகட்சிகள், சுயேட்சைகள். இதில் தேவிலாலையும், ராஜீவையும் எந்த நேரமும் திருப்திப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் சந்திரசேகருக்குஉண்டு. தேவிலால் செய்யும் தில்லுமுல்லுகளை சந்திரசேகர் கண்டும் காணாமல் இருக்க வேண்டும். கண்டு கொண்டதாக காட்டிக்கொண்டால் தேவிலால் பிரிந்து போய்விட்டால் சந்திரசேகர்ஆட்சி அம்போ. காணாதமாதிரிக் காட்டிக் கொண்டாலே மக்கள் மத்தியில் சந்திரசேகர்பாடு திண்டாட்டம். ராஜீவ் நல்லபிள்ளையாக இருந்து கொண்டு சந்திரசேகரைகொண்டு செய்விக்கபோகும் அனைத்து திட்டங்களுக்கும் சந்திரசேகர் சம்மதிக்க வேண்டும். சந்திரசேகர்முரண்டு பிடித்தால் ராஜீவ் தனது சகாவான ஜெயலலிதாவைக் கொண்டே சந்திரசேகரிடமிருந்து பிரதமர் பதவியை பறித்து விடுவார். ஒருபெண்ணினால்(சுஜாதேவியின் பிரார்த்தனை) கிடைத்த பிரதமர் பதவி ஒருபெண்ணினாலேயே(ஜெயலலிதா) பறிபோன கதையாகிவிடும். இதுதான் இன்றைய பிரதமரின் அவல நிலை.

> இலங்கைத்தமிழ் போராளிகளுக்கு தமிழக அரசு ஊக்கமளிப்பதன் மூலம் தமிழக சட்டம் ஒழுங்குக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் தமிழக அரசுமீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

னை, இராமஜென்மபூமிவிவகாரம், பொருளாதாரச்சிக்கல்கள், எண்ணெய்நெருக்கடி, பணவீக்கம், இலங்கைத்தமிழர் பிரச்சனை போன்ற பெரும்தலையிடிகளுக்குமத்தியில்பிரதமர் பதவியை ஏற்றிருக்கும் சந்திரசேகர் இவற்றிற்கு எவ்வாறு தீர்வு காணப்போகிறார் என்பது அரசியல் அவதானிகளின் எதிர்பார்ப்புகளாகும்.

பிரதமர் பதவியேற்ற சந்திரசேகர் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் ஆயுதங்களைக் கைவிட்டு இணக்கப்போக்குக்கு வருவதன்மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முன்வருமாறு தீவிரவாத இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இராமஜென்மபூமி விவகாரத்தில் இருதரப்பினரும் பரஸ்பரம் விட்டுக்கொடுப்பு, கலந்தாலோசனை, இணக்கப்போக்கு இவற்றின் மூலம் இசசர்ச்சைக்கு தீர்வு காண முயலுவோம் என்றும் இராமர் கோயில் கட்டப்படவேண்டும் என்பதை எல்லோரும் விரும்பும் அதேவேளை முஸ்லீம் பள்ளிவாசலை இடித்து விட்டல்ல என்று கருத்து தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தமிழ்போராளிகளுக்கு தமிழகஅரசு ஊக்கமளிப்பதன்மூலம் தமிழக சட்டம், ஒழுங்குக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் தமிழக அரசுமீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சந்திரசேகர் எச்சரித்துள்ளார். தமிழகஅரசு பற்றி சந்திரசேகர் வாயிலிருந்து வந்த முதல் வார்த்தையே சாட்டையடிதான். கருணாநிதி இனி நாட்களை எண்ணவேண்டியதுதான். பொருளாதார நிலை குறித்து கருத்து தெரிவித்த சந்திரசேகர் சிக்கனம் இன்று நாட்டுக்கு அவசியம். சிக்கனம் என்பது வெறும் சுலோகம் அல்ல அது பொருளாதாரத் தந்திரோபாயம் என்று கூறியுள்ளார். காஷ்மீருக்கு நேரில் சென்று நிலமையை அவதானிக்க சந்திரசேகர் விருப்பம் தெரிவித்தாராயினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இப்போது நிலமை சரியில்லை சற்றுச் சீராகும்போது போகலாம் என்று தடுத்துள்ளனர். இவரின் எதிர்கால நடவடிக்கைகளிலேயே இந்தியாவின் எதிர்காலமும், இவரின் அரசியல் எதிர்காலமும் தங்கியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேஜர் என்ன செய்யப் போகிறார்?

சின்னவன்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகெங்கு
ுப்பாக்கிக் கலாச்சாரத்தை பரப்பி தனது
ற்றைக் கழுவிக்கொள்வதற்கும், முதலாளித்
கொள்கையை தூவிவிட்டு உழைக்கும் மக்க
ச் சுரண்டி சுகபோகங்களை அனுபவிக்கவும்
ந்த பதினொரு வருடங்களாக லண்டனிலிரு
அமெரிக்காவுக்கு பெரும் துணைபுரிந்து வ
கத்யூனிஸ்ட் எதிர்ப்பாளர் பிரிட்டின் பிர
ர் திருமதி மாக்கிரட் தாட்சர் தனது கட்சி
லைவர் பதவி, பிரதமர்பதவி ஆகியவற்றிலி
ருந்து விலகிக் கொண்டுள்ளார். 65வயதான மா
கிரட் தாட்சர் கன்சவேட்டிங் கட்சித் தலை
பதவியை யார்போட்டியிட்டாலும் வென்றெ
ப்பேன் என்று சூழுரைத்திருந்தார். இப்போட்டி
முதலாவது சுற்றில் தட்சர் 204 வாக்குக
ளும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் தட்ச
எதிர்த்துப் போட்டியிட்டவருமான மிக்கே
ஹெசில்டின் 152வாக்குகளையும் பெற்றிருந்தன
ட்சியின் தேர்தல் விதிப்படி முதல் சுற்றில்
யின் 1/2பங்கு வாக்குகளும் மேலதிகமாக
வாக்குகளும் பெறப்படவேண்டும். 372உறுப்பின
ரான்ட கன்சர்வேட்டிங் கட்சியில் தட்சரி
204வாக்குகள் இத்தகைமைக்கு போதாமல்
ாயிற்று. ஆகவே தலைமைப்பதவியை வெற்றி

னைத்தொடர்ந்து தட்சருக்கு ஆதரவு வழங்கும் முக்கிய கட்சி உறுப்பினர்களுடனான கலந்தாலோசனையின் பின்பு தான்தலைவர் பதவியிலிருந்து விலகுவதாயும் தனது ஆதரவு ஹெசிட்டினை எதிர்த்துப் போட்டியிடவுள்ள நிதியமைச்சர் ஜோன் மேயருக்கு வழங்கவுள்ளதாயும் வெற்றி பெறுபவருக்கு தனது பிரதமர் பதவியை விட்டுக்கொடுப்பதாயும் அறிவித்தார். இப் போட்டியில் வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேட்டும் போட்டியிட்டார். இறுதிச் சுற்றில் தாட்சரின் ஆதரவுடன் போட்டியிட்ட 47வயதான நிதிஅமைச்சர் ஜோன் மேயர் வெற்றி பெற்று இங்கிலாந்தின் இந்த நூற்றாண்டின் இளைய பிரதமராகியுள்ளார். தட்சரின் இராஜினாமாகுறித்து உலகத்தலைவர்கள் பலரும்கவலையும், மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளனர்.

ஆர்ஜன்டினா படையெடுப்பிலிருந்து காப்பாற்றியவர் தாட்சர் என்று போக்லந்து தீவு கவர்னர்கவலை தெரிவித்துள்ளார். தாட்சரின் முடிவுதனது நாட்டில் நிச்சயமற்ற நிலைமையை தோற்றுவித்துள்ளதாய் தென்னாபிரிக்க ஜனாதிபதி கிளார்க் கூறியுள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தாட்சரின் இராஜினாமாவை வரவேற்றுள்ளார்.

தட்சர் அமெரிக்காவின் விசுவாசமான நண்பர் என அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்துள்ளார்.

கொள்கையில் சிறந்த நண்பரை இழந்துள்ளேன் என அமெரிக்க ஜனாதிபதி புஸ் கவலையுடன் க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பிய சரித்திரத்தில் முக்கிய சகாப்த ம்ஒன்றை தட்சர் பிரதிபலித்திருப்பதாய் பிரான்ஸ் ஜனாதிபதி மிட்ரண்ட் தெரிவித்தார். தைரியத்துடனும் திட உறுதியுடனும் திகழ்ந்த தலைவர் தட்சர் என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றேகன் புகழ்ந்துள்ளார்.

லிபியாவும், ஐ. ஆர். ஏ அரசியல் பிரிவும் தட்சரின் இராஜினாமா குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

எது எப்படி இருப்பினும் கன்சவேர்ட்டிவ் கட்சியே மீண்டும் ஆட்சியிலமர அதிக வாய்ப்புக்கள் இருப்பதாய் கருதப்படுவதால் தாட்சரின் நடவடிக்கை, தொடர்புகள் மேஜர் மூலமாக தொடரப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு, ஒடுக்கு முறைகளுக்கு இங்கிலாந்து துணைபுரியும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

# மீண்டும் ஹெல்மட்கோல்

சின்னவன்.

கிழக்கு ஜேர்மனி மேற்கு ஜேர்மனியின் இணைவுக்குபின்பு முதன்முறையாக முழுஜேர்மனிக்குமான பாராளுமன்ற பொதுத்தேர்தல்2.12.90 ல்நடைபெற்றுள்ளது. மேற்குஜேர்மனியில் ஆட்சி செய்துவந்த கிறீஸ்தவஜனநாயகயூனியன் என்னும்



ODUகட்சிக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றும் என்பதில் அனேகமானவர்களுக்கு ஐயம் இருக்கவில்லை. இத்தேர்தலில் ODUகட்சி 36.7%வாக்குகளையும் அதன் நட்புக்கட்சியான OSUகட்சி 7.1%வாக்

தில் கூட்டணி அமைத்திருந்த FDPகட்சி 11%குகளையும் பாராளுமன்றத்தின் பிரதான கட்சியாக விளங்கிய விளங்குகின்ற SPD 33.5%வாக்குகளையும் இவர்களது தோழமைகட்சியான GREEN WESTகட்சி3.9%வாக்குகளையும் கிழக்குஜேர்மனியில்40வருடங்களுக்கு மேலாக ஆட்சிசெய்த SEDஎன்ற இப்போது பெயர் மாற்றம் செய்தPDS கட்சி2.4%வாக்குகளையும் கிழக்கு ஜேர்மனியில் முதன்முறையாக தேர்தலில் நின்ற GREEN EAST1.2%வாக்குகளையும் பெற்றுள்ளன. மீண்டும்ODU. OSU FDPகூட்டமைத்தே ஆட்சி அமைக்கவுள்ளது.

முழு ஜேர்மனியிலுமிருந்து 77.8%மான மக்கள் இத்தேர்தலில் வாக்களித்துள்ளனர். இம் முறை தேர்தலில் ODUதனது தேர்தல் பிரச்சாரத்தில் கிழக்கு ஜேர்மனியை புனரமைப்போம் என்றும் 92ம் ஆண்டு உதிக்கஇருக்கும் ஐக்கிய ஐரோப்பாவில் ஜேர்மனியை இராணுவ, பொருளாதாரமற்றும் அனைத்து துறைகளிலும் முன்னணியில் திகழச்செய்வோம் என்று கூறியிருந்தது. இம்முறைத்தேர்தலில் முக்கிய பங்கு வகித்த கிழக்கு மேற்கு ஜேர்மனிஇணைப்பினை ODU முன்னின்று நடாத்தியதினால் பிரதமர் கெல்மட்கோல்

www.tamilarangam.net

கள பெரும்பான்மையாக சுயமாகவும், சுயேச்ச
ார்ந்த, கூட்டமைத்த கட்சிகளுக்கும் வாக்களி
த்துள்ளனர்.
PDகட்சிதேர்தலில் வெல்வதற்கு சூழ்நிலைகள்
ாதகமாக அமைந்ததும் SPDயின் தேர்தல் பிர
சாரங்களில் உள்ள குறைபாடுகளும் காரண
ாகஅமைந்தன. ODUஆட்சியிலுள்ள குறைபாடுக
ளை மக்களுக்கு சொல்ல முனையவில்லை, தேர்த
விளம்பரங்களில் மக்களுடன் பேசவில்லை. கி
க்கு மேற்கு இணைப்பில் ODUவுடன் கிழக்கில்
சேர்ந்து கூட்டணி அமைத்தது. கிழக்கில் அரசி
யல் அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்,
அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்
டும் ஆகவே இரு பெரியகட்சிகளும் கூட்டணிஅ
மைக்கிறோம் என்றனர். இறுதியில் கிழக்கின்
அரசியல் அமைப்பு மாற்றப்படாமலேயே கிழ
க்கு மேற்கு ஒன்றிணைக்கப்பட்டு ODUகட்சி SPD
யின்முகத்தில் கரிபூசியது. இது SPDயின் இராஜ
தந்திர பலவீனத்தை காட்டியது. மக்களுக்கு பி
ரச்சனைகளை சுருங்கச்சொல்லி விளங்கப்படு
த்தாதது, தமது அரசியல்திட்டத்தை புத்தகமா
க அடித்து பிரசுரித்தது போன்ற காரணங்கள்
SPDயில் தோல்விக்கு காரணமாயின. GREEN WEST
கட்சி இம்முறை பாராளுமன்றத்துக்கு தெரிவுசெ
ய்யப்படுவதற்கான 5%வாக்குகளை பெறமுடியா
மல் போனமைக்கு கிழக்கு மேற்கு இணைப்பு
அரசியல் வேலைத்திட்டத்தில் கலந்துகொள்ளா
மல் போனது முக்கிய காரணமாக கருதப்படு
கின்றது. எல்லோரினதும் கவனத்திலிருந்த கட்
சிSEDஎன்ற PDS கட்சியாகும். இவர்கள் முற்றுமுழு
தாக கிழக்கில் நிராகரிக்கப்படுவார்கள் எ
ன்றே அனைவரும் எதிர் பார்த்தனர். ஆனால் அ
வர்கள் 11.1%வாக்குகளைக் கிழக்கில் பெற்றுள்
ளனர். இவர்கள் அகில ஜேர்மனியில் 2.4%வாக்கு
களைப்பெற்றபோதும் பாராளுமன்றத்துக்கு வந்
துள்ளனர். கிழக்கு மேற்கை இணைத்து நடக்கும்
முதலாவது பொதுத்தேர்தலாகையால் எந்தஒ
ருகட்சியும் ஜேர்மனியில் ஏதாவதொரு பகுதி
யில் 5%மான வாக்குகளைப்பெற்றால் போதும்

ணைந்த ஜேர்மனியில் 2.4%வாக்குகளையும் மே
ற்கு ஜேர்மனியில் 0.3%வாக்குகளையும் பெற்ற
PDS கிழக்கு ஜேர்மனியில் 11%வாக்குகளைப்பெ
ற்றதால் 17ஆசனங்களைப் பெற்று பாராளுமன்ற
ம் சென்றுள்ளது. PDSகட்சி 11%வாக்குகள் பெற்ற
மைபற்றி இருவித கருத்துக்கள் உள்ளன. கடந்த
காலத்தில் விடப்பட்ட தவறுகளை விமர்சனம்
சுயவிமர்சனம் மூலம்தம்மை செழுமைப்படுத்து
வதன் மூலம் எதிர்காலத்தில் தமது கட்சியை
சரியான பாதையில் இட்டு செல்லமுனையும் இ
ளம் உறுப்பினர்களே PDSக்கு ஆதரவளித்துள்ளன
ரென்கின்றனர் ஒருபகுதியினர். இம்முறை கிடை
த்துள்ள தேர்தல் சலுகையைக் கொண்டே PDS
பாராளுமன்றம் வந்துள்ளது. கடந்த காலங்களி
ல் SEDயிடமிருந்து நேரடியான பலன்களையும் உ
தவிகளையும் பெற்றுள்ளவர்களும், PDSகட்சிமீதுஅ
தீதவெறித்தனமான நம்பிக்கை கொண்டுள்ளவ
ர்களுமே வாக்களித்த11%மக்கள். மறுமுறைத் தே
ர்தலில் இவர்களுக்கு இச்சலுகை கிடைக்காதா
கையால் இவர்கள் பாராளுமன்றம் வரமுடியாது
என்கின்றனர் ஒருபகுதியினர்.
ஆனால் PDSஇன் வளர்ச்சியானது SPDயின் கூட்டுட
ன் ODUவுக்கு தலையிடியைக்கொடுக்கும் எனப்பய
ந்து ODU-PDSஐ அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு
வருகிறது. அண்மையில் PDSகிழக்கில் பணத்தை
சுவிஸ் வங்கி, சோவியத் யூனியன் போன்ற இட
ங்களில் பதுக்க முனைவதாக PDSகட்சி முக்கிய
ஸ்தரை கைதுசெய்து ஆதாரமின்றி விடுதலை
செய்ததானது PDSஐ மறைமுகமாக அழிக்க, த
டைசெய்ய, மக்கள் மத்தியில் கெட்டபெயரைஏ
ற்படுத்த முனைந்தமுயற்சியே. PDSதன்னை விம
ர்சனம் சுயவிமர்சனத்தின் மூலம் செழுமைப்படு
த்தி வளர்க்க முற்படுவது வரலாற்றில் தவிர்க்
க, தடுக்கமுடியாதது. மக்களுக்கு உண்மையானவ
ர்களாய் கடந்தகால பாடங்களைகொண்டு வ
ளர்வது PDSஇன் இளைஞர் அணியிலேயே தங்கியு
ள்ளது. இம்முறை REPஎன்னும் கடியரசுக்கட்சி நி
ராகரிக்கப்பட்டுள்ளது மீண்டும் இந்நாட்டில்
பாசிச சர்வாதிகாரம் வளர்வதை, மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கிய சந்திப்பு

ரமேஸ்

9வது இலக்கியச் சந்திப்பானது செப்ரெம்பர் 29-30ஆகிய நாட்களில் ஆலன் நகரில் நடைபெற்றது. இலக்கியச்சந்திப்பானது தனது 9வது தொடருடன் இரண்டாவது வயதையும் பூர்த்திசெய்து கொண்டது. இச்சந்திப்பில் ஜேர்மன், சுவிஸ், பிரான்ஸ், ஆகிய நாடுகளில் வெளிவந்த, வெளிவருகின்ற தமிழ்சஞ்சிகைகளின் ஆசிரியர்களும், ஆக்கதாரர்களும், இலக்கிய விரும்பிகளும் கலந்து கொண்டார்கள். இவ் இரு நாள்சந்திப்பை நெறிப்படுத்திய செயற்குழுவினர் உற்சாகத்துடன் செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இச்சந்திப்பு வித்தியாசமான தோற்றத்தை பெற்றிருந்ததை உணரமுடிந்தது. இத்துடன் இடையிடையே சில குளறுபடிகளையும் காணக்கூடியதாக இருந்தது.

உயிர் நீத்த போராளிகளுக்கும் மக்களுக்குமான வழமையான இரண்டு நிமிட மௌனஅஞ்சலியை இம்முறை துப்பாக்கிதூக்காது, பேனாவை ஆயுதமாகப்பாவித்த, மலையகத் தொழிலாளியும், எழுத்தாளனும், இலக்கியவாதியுமான என்.எஸ்.ராமையா பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இராமையாவின் குடும்பத்தினருக்கு நிதி சேகரிப்பும் இடம் பெற்றது.

வழமையான விமர்சனங்களும் பதில்களும் நீண்டு கொண்டேசென்றன. விமர்சனங்களுக்கிடையிலான தலைவரின் குறுக்கீட்டை இலக்கியவாதிகள் வெறுத்தனர். இச்சந்திப்பானது ஐக்க முரண்பாடுகளையும், தனிப்பகைமைகளையும், காழ்ப்புணர்ச்சிகளையும் வளர்க்க உதவுகிறதோ என்ற ஐயப்பாட்டையும் தோற்றுவித்தது.

மனிதம் சஞ்சிகைக்குழுவினரால் தேடலில் எழும்அடிப்படைப் பிரச்சனைகள் என்ற கட்டுரை வாசிக்கப்பட்டது. கட்டுரையின் கருத்துக்களில் மா [illegible]

யாமல் கிண்டாடிக்கொண்டிகளை. மனிதக்கின் மார்க்ஸிய கருத்துக்களை எம்மவர் பலரும் உள்வாங்கத்தயங்கினர். சந்திப்பாளர்கள் இக்கட்டுரையில் கடும் சொற்பிரயோகம் பாவிக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்கள். இக் கட்டுரையைஆர்வத்தோடு கிரகித்தவர்களும் இல்லாமல் இல்லை. கட்டுரையை பிரதி செய்து சந்திப்பாளர்களுக்கு கொடுத்திருந்தால் இதன் குறை ஓரளவு நிறைவு பெற்றிருக்கும். என்ன இருந்தாலும் இக்கட்டுரை இலகு நடையில் எழுதப்பட்டிருந்தால் பாராட்டை பெறாவிட்டாலும் விமர்சிக்கப்பட்டாவது இருந்திருக்கும். எனினும் சந்திப்புக்களிலாவது சந்திப்பாளர்கள் உள்வாங்கக் கூடிய முறையில் கட்டுரைகள் எழுதப்பட்டால் நன்றாக இருக்கும்.

'இலங்கை மக்களும் போராட்டமும்' எனும்தலைப்பில் திரு ப.வி.ஸ்ரீ ரங்கன் உரையாற்றினார். இலங்கையில் தமிழர், சிங்களவர், மலையகத்தமிழர், தமிழ்பேசும் முஸ்லிம்கள் என நான்கு தேசியஇனங்கள் இருப்பதாகக் கூறினார். பறங்கியரைமறந்து விட்டார் போலும். இவ்வினங்கள் தங்களது சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடவேண்டும். இதற்கான உரிமை இவர்களுக்கு உண்டெனும் தத்துவார்த்த அடிப்படையில் பேசினார். ஆனால் நடைமுறையில் எவ்வளவு தூரத்திற்கு சரிவரும் என்பதனை இன்றைய போராட்ட வடிவங்களினூடு படம் பிடித்துக் காட்ட மறந்துவிட்டார். இவரின் கருத்துக்களின் மேல் தொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார் இருந்தும் சிலர் அப்பதில்களால் திருப்தியடையாது காணப்பட்டதாயும் உணர முடிந்தது.

'கவிதைகள் மீதான விமர்சனப்பார்வை' என்றவிடயம் பற்றி திரு அ.குமரன் விரிவு செய்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன அடிபபடையில்,என்ன அமைப்புமுறையில் எழுதப்பட வேண்டும் என்ற ஒரு சரியான நெறிமுறையை இதுவரை யாரும் சொல்லவில்லை இதற்கென இலக்கணம் தோற்றம் பெறவில்லை.ஆனாலும் புதுக்கவிதையின் தோற்றம்,வளர்ச்சி,அதன் யதார்த்த இலக்கிய நிலைகள் என்பன உருப்பெற்று விட்டன.இந்திய,ஈழ கவிதைகளையும் கவிஞர்களையும் ஒப்பீடு செய்தார்.

சிறுவர் இலக்கியம் பற்றிய கலந்துரையாடலை திரு ப.குமாரசாமியும் திரு சின்ன இராஜேஸ்வரனும்தங்களால் இயன்ற அளவு முயன்று நடைமுறைப்பிரச்சனைகளை வெளிக்கொணர்ந்தார்கள்.அவர்கள் வெளிக்கொணர்ந்த பிரச்சனையை வெற்றி கொள்வதற்கான அணுகுமுறைகளை சந்திப்பாளர்களினால் முன்வைக்கப்பட்டது போதாமலேயே இருந்தது.இதன் எதிர்காலப்பாதிப்புகளை எந்தப்பெற்றோரும் சீர்தூக்கிப் பாக்கிறார்கள் இல்லை. ஆனால் இதற்குப் பலியாவதுஎமது எதிர்காலச்சந்ததி. மொழியின் அடிப்படையிலேயே எமது அரசியல்போராட்டம் வளர்ச்சியடைந்தது.ஆனால் அதேமொழி இங்கு இன்று புறக்கணிக்கப்படுவதைப் பார்த்தால் விந்தையாகவே இருக்கிறது.இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் சிறுவர்அமுதத்தை வெளிக்கொண்டு வருவேன் என்ற சிறுவர்அமுதம் ஆசிரியரின் உறுதியை பாராட்டாமல் இருக்க முடியாது.

மக்களுக்கு சேவைசெய்யும் காலங்களில் எம்மவருக்கு தெரியாமல் கொலையுண்டதால் நிலைபெற்றுவிட்ட வீரப்பெண்மணியை நினைவுகூர வாய்ப்புக்கிடைத்தது.போராடுவதற்கு ஆயுதம் தேவையல்ல,ஆயுதம் இல்லாமலும் போராடலாமென்பதை தனது வாழ்க்கையின் நடைமுறையாகக் காண்பித்த சிறப்பை திருமதி றஜனி திரணகமவிடம் காண்கிறோம்.பாரதியின் புதுமைப்பெண்ணாக எங்கள் பெண்கள் சமூகத்தில் தோன்றி அவர்களின் அவலங்களையும் அடக்குமுறைகளையும் உடைத்தெறியப் போராடினார்.அதன் பலன் இன்றைய நவீன போராளிகள் எனப்படுபவர்களினால் கொலை செய்யப்பட்டு அனாதைப்பிணமாகத் தெரிவிலே வீழ்த்தப்பட்டா ர்களுக்கும் அஞ்சலி என்பது அவர்கள் நேசித்த கொள்கைகளையும் போராட்ட நோக்கங்களையும்வென்றெடுக்க ஒன்றுபடுவதேயாகும்.இவ்வீரப் பெண்மணியைப்பற்றி பலர் உரையாற்றினார்கள்.இவரைப்பற்றி திருமதி மல்லிகா பரா அவர்கள் பேசுகையில் யார் இறந்தாலும் றஜனிகவலைப் படுவார்.யார் பிழை செய்தாலும் பிழையைசுட்டிக் காட்ட தயங்கமாட்டார்.டாக்டர்என்றாலும் எளிமையாகவே இருந்தார். பெண் விடுதலைக்காகப் பெரும் பாடுபட்டார் என்று தெரிவித்தார். செல்வி ரஞ்சினி பேசுகையில்சாவுக்கும் அஞ்சாமல் சகல அட்டூழியங்களுக்கெதிராகவும் குரல் கொடுத்தார் என்றும்,ஒரு

பெண்ணால்எதையும்செய்யமுடியும்,எதனையும் சாதிக்க முடியும் என்பதனையும் அடிக்கடி கூறுவார் என்றும்,றஜனியை கொன்றவர்கள் மக்களால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் தெரிவித்தார்.'எதிரியும் மனிதன் அவனுடைய உயிரும் மதிக்கப்படவேண்டும்'.என்ற கருத்தையுடைய அப்பெண்மணியை எதிரும் புதிருமான கருத்துக்கள் கொண்டவர்களும் அஞ்சலித்தார்கள்.இப்படியான புனிதத் தொண்டர்களை போர்வையாக்கி தங்களின் போலித்தனங்களை மறைப்பது மரபு.

'பெண்களும் தேசவழமையும்'என்றிருந்த நிகழ்ச்சிபெண்களும் சட்டமும் என உருப்பெற்றது.இக்கட்டுரையில் பெண்களைப் பாதிக்கும் பல சட்டங்களும்,தேச வழமைச்சட்டத்தின் குறைநிறைகளும் கூறப்பட்டன.சமூக,தொழிலாளர் நலன் பேணும்சட்டங்களில் பெண்களுக்குரிய சாதக, பாதகமான தன்மைகள் எடுத்துக்கூறப்பட்டன.அரச,வர்த்தக,தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் பெண்களின் பாதுகாப்புகளை சட்டம் எப்படி நிர்ணயித்திருக்கிறது என்பவைகள் கூறப்பட்டன

மேற்கு ஜேர்மனியில் வெளிவந்துகொண்டிருக்கும்(தமிழ்)சஞ்சிகைகள் பற்றியகலந்துரையாடலை விமர்சனமாகச் செய்த திரு வி.நடராசன் பலரது பாராட்டைப் பெற்றார்.அமைதிப்படை இலங்கை இந்திய ஒப்பந்தம்,தேர்தல்,ஆக்கிரமிப்பு,தொண்டர்படை,மக்கள் என்றபத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ர்.சஞ்சிகைகளில் கூறப்பட்டவற்றை முழுமையாகவெளிக்கொண்டு வரவில்லை.சஞ்சிகைகளில் இவை வெளிவந்த காலங்களில் உறக்க நிலையில் இருந்த இவர் இப்பொழுதுதான் விழித்திருக்கிறார் போல்தெரிகிறது.தனது பேச்சுத்திறமையினால் மற்றவர்களது சுதந்திரமான கருத்துக்களை பின்னடையச் செய்யலாம் என்ற நோக்கோடு செயல்பட்டார் போலும் தெரிந்தது. என்ன தான் இருந்தாலும் விமர்சனத்தின் தேவையை,அவசியத்தை உணரவைத்த நடராஜனை பாராட்டாமல் இருக்க முடியாது.விமர்சனங்களை ஜீரணிக்கமுடியாது உணர்ச்சிவசப்படும் சில சஞ்சிகை ஆசிரியர்களையும் இச்சந்திப்பில் காணக்கூடியதாக இருந்தது.விமர்சனங்களைத் தாங்கிக்கொள்ளக் கூடிய மனோபக்குவமில்லை இல்லாதவர்களும் சஞ்சிகை ஆசிரியர்களாகஇருப்பின்,சஞ்சிகைகளின் வளர்ச்சியும் கேள்விக்குறியாகவேஅமையும் என்பதில் சந்தேகம்ஏதும் இல்லை.

'புலிகளைக் கண்டித்து நாம் சஞ்சிகை எழுதினால் சஞ்சிகை வெளியிடமுடியாது.சஞ்சிகை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.அதனால் தான் நாம் புலிகளைக் கண்டிப்பதில்லை.' இவ்வாறு இரண்டாவது நான் சந்திப்பு முடியும் வேளையில்இடம்பெற்ற வாக்குவாதத்தின் போது மனிதம்' சஞ்சிகைக்குழுவினர்கூறியது கவலை அளிப்பதாகவே இருந்தது.

## தொழிற்சங்க வரலாற்றுக்கு தோள்கொடுத்த வெள்ளையன்.

மலையக மக்களின் விடியலுக்காக உழைத்தவிரல் விட்டு எண்ணக்கூடிய தொழிற்சங்கவாதிகளுள் வி.கே.வெள்ளயன் முதன்மையானவர்.தனது வாழ்நாளில் மலையகத்தொழிலாளர்களுக்காகபல விடயங்களை நடைமுறைப்படுத்த பாடுபட்டு வெற்றி கண்டவர். 1918ம் ஆண்டு பொகவந்தலாவையில் பிறந்த வெள்ளயன் பொகவந்தலாவை சென்மேரிஸ் பாடசாலையிலும் கண்டி திருத்துவக்கல்லூரியிலும் கல்விபயின்றதோடு லண்டன் மெற்றிக்கலேசன் பரீட்சையிலும் தேர்ச்சிபெற்றார்.

1942ம் ஆண்டு முதல் தொழிற்சங்கத்தில் பிர-வேசித்த வெள்ளயன் அக்காலத்தில் பொகவந்தலாவை,அட்டன் பகுதிகளில் தொழிலாளர்கள் அடிமைகள் போல்நடாத்தப்பட்டனர்.தோட்டங்களுக்குள் வெளியார் போகமுடியாமை,உறவினர்கள் வருகை தரமுடியாமை,தொழிலாளி காரில் செல்ல அனுமதிமறுப்பு,வானொலி பாவிக்க மறுப்பு,திருமணம் போன்ற சடங்குகளை ஆடம்பரமாக செய்ய மறுப்பு போன்ற பிரச்சனைகளை போராட்டத்தின்மூலம் வெள்ளயன் வென்றெடுத்துக் கொடுத்தார்.

பெண்களுக்கு ஒருநாள் சம்பளத்துக்கு28றாத்தல் கொழுந்து கொய்தல் போதும் என்ற நடைமுறையை கொண்டுவர வெள்ளயன் பாடுபட்டு வெற்றி கண்டார்.தோட்டத் தொழிலாளிக்கு தேயி-லைஇலவசமாக கொடுக்க வழிவகுத்தவர் இவரே.1966ம் ஆண்டு மே முதலாம்திகதி தொழி-லாளர் தேசிய சங்கத்தை ஸ்தாபித்த வெள்ளயன் பல்வேறுபட்ட வழிகளில் மலையக தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கும் தொழிற்சங்கவழியை தொழிலாளர் கடைப்பிடிக்கவும், 1971ம் ஆண்டு டிசம்பர் 2ம் திகதி மரணிக்கும் வரை பாடுபட்டார்.

(45ம் பக்க தொடர்ச்சி)

பிள்ளையருக்கு வாத்தியார் ப' க்ககூடாது என் விளங்கேல்லை.தலையைச்சொறிந்து கொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமூகத்தின் சமகால வளர்ச்சி.

உலகியல் ஒப்புநோக்கில் எமதுசமூகத்தின் சமகால வளர்ச்சியின் பின்னடைவுக்கான வரலாற்றுக் காரணிகளையும் அவைகள் அக,புறரீதியாகளந்த வகையில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை ஆராய முற்பட்டிருக்கும் நாம் எமதுசமூகத்தின் ஒவ்வோர் நிலையிலும் ஏற்பட வேண்டிய மாற்றங்களுக்கான தேவைகளையும் அதற்கான தேடல்களையும் உணர்வு பூர்வமாகக்கண்டறிய வேண்டியது தமிழ் பேசும் சமூகத்தின்வளர்ச்சியின் ஒவ்வோர் நகர்வின் மீதும் அக்கறை கொண்ட முற்போக்குச் சக்திகளின் வரலாற்றுக் கடமையாகும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் அரசியல்,பொருளாதாரம்,விஞ்ஞானம்,தொழில்நுட்பம்,கலாச்சாரம்,நாகரீகம்போன்றவற்றில் பலவகையான புரட்சிகர மாற்றங்களும்,சாதனைகளும்ஏற்பட்டுள்ளன. இவ்வகையான வளர்ச்சிக்கான காரணிகள் சென்ற நூற்றாண்டிலேயே அறியப்படாமையாலும்,. தொழில்புரட்சி ஏற்பட்டதன் விளைவாக கண்டுபிடிக்கப்பட்ட நவீன இயந்திர சாதனங்கள் தொழில் வளர்ச்சியில் பாரிய அளவில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. சமுதாயத்தின் உற்பத்திமுறைகளையும்,வளர்ச்சிப்போக்கினையும் உழைக்கும் மக்களுக்கான தீர்வுகளையும் சமூக விஞ்ஞான ரீதியாக தோழர் கார்ல் மாக்ஸ்,ஏங்கல்ஸ்போன்றோர் ஆராய்ந்தார்கள். டார்வின் கூர்ப்புவிதி,நியூட்டனின் இயக்க விதி போன்றவைகள் புதிய சிந்தனையோட்டத்தை உருவாக்கின. மனிதகுல வரலாற்றில் கடந்த 90ஆண்டுகள் பாரியஅளவிலான மாற்றங்களை ஏற்படுத்தி விட்டகாலகட்டமாகும். தேசிய விடுதலைக்கான போராட்டங்கள்,காலனித்துவ ஆதிக்கத்தின்பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டங்கள்,சமூக விடுதலைக்கான போராட்டங்கள்,கலாச்சாரப்புரட்சிகள்,சீர்திருத்தங்கள் போன்றவற்றுக்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வெற்றியும் கண்டுள்ளன. தொடர்ந்தும்முன்னெடுக்கப் படுகின்றன. மறுபுறத்தில் விஞ்ஞானமும்,தொழில்நுட்பமும் மனிதகுலமே அதிசயிக்கத்தக்க வகையில் முன்னேற்றமடைந்துள்ளன அதேவேளை மனிதகுலத்தையே அச்சுறுத்தும் வகையில் அழிவு சக்தியாக விஞ்ஞானம் மனிதகுல விரோதிகளாக முதலாளித்துவ ஏகாதிபத்தியக்கூட்டுக்களால் கையாளப்படுமா?என்ற அச்சமும் அதிகரித்த வகையில் உள்ளன. பலவகையான மாற்றங்களுடன் உலகில் பல பாகங்களிலுமுள்ள சமூகங்கள் முன்னேறிச்செல்லும் போது எமதுதமிழ் பேசும் சமூகம் மட்டும் பலவகையான முரண்பாடுகளுடன் நூற்றாண்டு கால வளர்ச்சிப் பின்னடைவுகளுடன்தேங்கி நிற்பதற்கான காரணிகள் என்ன? என்பதை மிகவும் ஆழமாகவும், நிதானமாகவும் அகப்புற ரீதியான வரலாற்றுக் காரணிகளுடன் ஆராயவேண்டியுள்ளது.

---

எசனில் நடைபெற்ற எட்டாவது இலக்கிய சந்திப்பு தொடரில், இடம் பெற்ற 'உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமூகத்தின் சமகால வளர்ச்சி.' என்னும் நிகழ்ச்சியில் அ. அலெக்ஸ் அவர்களால் இக்கட்டுரை வாசிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமூக வளர்ச்சியின் பின்னடைவுக்கான அகரீதியான காரணங்கள்.

## 1. சாதிஅமைப்பு முறையினூடாக சமூகம் வளர்த்தெடுக்கப்படும் வர்க்க நிலையற்ற போக்கு.

அடிமைச் சமுதாய அமைப்பு முறையினூடாக வளர்த்தெடுக்கப்பட்ட சமுதாய அமைப்பு முறையைத் தற்காத்து கொள்வதற்காக அமைக்கப்பட்டதே சாதிஅமைப்பு முறையாகும். சமூகத்தில் சிறு தொகையினராக இருக்கும் நிலவுடமையாளருக்கு சேவகம் செய்வதற்காக தொழில்ரீதியாகப் பிரிக்கப்பட்டதே இச்சாதியமைப்பு முறையாகும். தொழில்ரீதியாகப் பிரிக்கப்பட்ட அத்தொழிலாளர்கள் அனைவரையும் வர்க்க அடிப்படையில் ஒன்றிணைய முடியாதவாறு சாதித் தட்டு அடுக்கு முறையை மக்களின் மனங்களில் ஆழப்படுத்தியது நிலப்பிரபுத்துவம். இச்சமூக ஒடுக்கு முறைக்கெதிராக போராட்டங்கள் யாவும் ஒடுக்கப்பட்ட மக்களின்இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறுகளுமுண்டு. அடங்காத்தமிழன், கணிதமேதை, பிரித்தானியமகாராணிக்கு கணிதம் போதித்தவர் என்றெல்லாம் சமூகத்தில் ஓர் அந்தஸ்த்தை பெற்றிருக்கும் திருவாளர் சுந்தரலிங்கம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள்பிரவேசம் செய்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிரான போராட்டங்களையும் வழக்குகளையும் முன்னின்று நடத்தினார். சட்டத்தையும், ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்ட கொண்டுவரப்பட்ட ரோமன் டச்சு சட்டத்தை ஒதுக்கிவிட்டு, அதைவிடப் பிற்போக்குத்தனமான, தனியுடமைச்சமுதாயத்தைக் கட்டிக்காக்கும் தேசவழமைச் சட்டத்தினூடாகவே வழக்காடினார் திருவாளர் அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம். எமது சமூகத்தின் ஒரு பகுதியினர் குறைந்த பட்சம் தமது அடிப்படைக் கல்வியைக்கூட கற்கமுடியாது போன ஒடுக்குமுறையின் எச்சசொச்சங்கள் [illegible]ரை ஒருசில பகுதிகளில் தென்படும் வேதனையான காட்சிகளுமுண்டு. சாதியமைப்புமுறையின் காரணமாக எமது சமூகத்தில் ஒரு பகுதியினருக்கு கிடைக்கும் சமூகஅந்தஸ்து, பொருளாதாரத் தன்னிறைவு, கல்வியறிவு போன்றவைகள் சாதிரீதியாக ஒடுக்கப்படும் மக்களான மறுபகுதியினருக்கு பெரும்பாலும் கிட்டுவதில்லை. பொருளாதாரச் சுமைகாரணமாகவும் மற்றும் இதரகாரணிகளாலும் எமது சமூகவளர்ச்சிக்கான அறிவுஜீவிகளை சாதியொடுக்குமுறையின் காரணமாக வளர்த்தெடுக்க முடியாது போயுள்ளது. இச்சாதியமைப்பு முறையினால் எமது சமூகம் பல பிரிவுகளாகப் பிரிந்து பிரிந்து தத்தமது தனித்துவங்களைப் பேணுவதால் சமூகத்தில் ஏற்படும் திருமணங்களும் அவ்வப்பிரிவினரிடையே சுற்றிச்சுற்றி நடைபெறுவதால் விஞ்ஞானவியல் ரீதியாகவும் எமது சமூகத்தில் புதிய அறிவுஜீவிகள் தோற்றம் பெற முடியாமைக்கான காரணியாக சாதியொடுக்குமுறை அமைந்து வருகிறது. அத்துடன் எமக்கள் தேசியத்தை முழுமையாக வளர்க்க முடியாமல் போயுள்ளது. எமது இனத்தின் பெரும்பகுதிமக்கள் பின்தங்கிய நிலையில் இருக்கும் போது சிறுபகுதியினர் தம்மைக் கல்விமான்களென்று கூறிக்கொள்வதோடு சிங்களவன் மோடன் என்ற பிற்போக்கு வாதச்சிந்தனையையும் கொண்டுள்ளதானது மிகவும் வேடிக்கையும் வேதனையுமானதாகும். உலகில் மனிதனினம் நாகரீகமடைந்துவிட்ட இந்த யுகத்திலும் கிணற்றில் தண்ணீரள்ள விடலாமா? பாடசாலையில் முன்வாங்கில் அமர விடலாமா? கோவிலுக்குள் புகவிடலாமா? உணவுச்சாலைகளில் அமர்ந்திருந்து சாப்பிட விடலாமா? தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் இவர்களை ஆயுதமேந்திப் போராட அனுமதிக்கலாமா? போன்ற எண்ணங்கள் இன்றும் எமது மனங்களில் பிரதிபலித்துக்கொண்டிருக்கையில் எமது சமூகத்தின் உள்முரண்பாடு அற்றுப் போய் விட்டதாக யாரும் கருதிவிட முடியாது. இந்நிலை இப்படித்தொடர்கையில் எமது சமூகத்தின் சமகால வளர்ச்சியை [illegible]தில்தான் ஆராய்ச்சி செய்து க

www.tamilarangam.net

டு பிடிக்க வேண்டும். எமது சமூகம் நாகரீகம டைந்த சமூகமென நாம் கருதமுடியாது.

## தரகு முதலாளித்துவத்தின் பேரினவாதப்போக்கு.

ரித்தானிய காலனித்துவம் தமது அடிவருடிக் கூட்டமான தரகுமுதலாளித்துவத்திடம் நாட்டை ப்படைத்து விட்டு சென்ற போதும் அவர்களால் ர் முதலாளித்துவப் புரட்சியை தன்னிலும் முன் னடுக்க முடியாது. பிரித்தானியரின் பிரித்தா ம் சூழ்ச்சியின் போதனையின் காரணமாக வ ர்த்தெடுக்கப்பட்ட இனவாதக் கண்ணோட்டம் பரும்பான்மைச் சிங்கள அரசியல்வாதிகளிட பேரினவாதச் சிந்தனையோட்டத்தை மிகவு வேகமாக வளர்த்தெடுத்தது. இதன் விளைவாக திட்டமிட்ட வகையில் அரசியல் ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும், கல்விரீதியாகவும் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கி வந்தது அரசய ந்திரம்.

எமது பாரம்பரியப் பிரதேசத்தில் செறிந்து கிடக்கும் இயற்கை வளங்களையும், மூலப் பொரு ட்களையும் பயன் படுத்தி தொழில் துறை அபிவி ருத்தி செய்யப்படவேண்டும் என்பதில் பேரின வாத அரசுகள் எந்தக்காலகட்டத்திலும் அக்க றைகொண்டதில்லை. பெரிய தொகையான மூத லீடுகளை தமிழர்களின் பாரம் பரிய பிரதேச த்தில் முடக்கவதா(?) என்ற போக்கும், அவ்வாறு செய்யப்படும் முயற்சிகளால் ஏற்படும் தொழி ல்வாய்ப்புக்கள் யாவும் தமிழ் பேசும் மக்களுக் குகபோய்ச்சேரும் என்ற பேரினவாதப் போக் கின் காரணமாகவும் தமிழ் பிரதேசத்தில் எ வ்வகையான தொழில்துறை அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. கடந்த 30ஆண்டுகளுக்கு முன் பாக ஆரம்பிக்கப்பட்ட வாழைச்சேனை காகி தத்தொழிற்சாலை போன்றவைகள் எந்தவித மான அபிவிருத்தியும் செய்யாமல் அரசால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும்போது காகி தத்தொழிற்சாலைக்கு தேவையான மூலப் பொ ருட்களான வைக்கோல் அம்பாறை, மட்டக்களப் பு மாவட்டங்களில் அதிகமாகக் கிடைத்தும் தெ

ன்கைப்பிராந்தியத்திலுள்ள ஆலைக்குப் பயன் ப டுத்திஅபிவிருத்திகளை மேற்கொள்ளாது மொ னராகலை மாவட்டத்திலுள்ள எம்பிலிபிட்டிய என்னுமிடத்தில் தொழிற்சாலையை அமைத்து அ தற்குத் தேவையான வைக்கோல்களை மட்டக்க ளப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்துஎடுத்துச் செல்லும் உள்நோக்கம் உதாரணத்திற்குப் போ துமானதாகும். 70களில் உருவாக்கப் பட்ட இறக் குமதிக் கட்டுப்பாட்டினால் எமது பிரதேசத்தி னில் உருவாகிய சிறு சிறு கைத்தொழில் திட் டங்கள் முன்னேற்றகரமாக வளர்ச்சியடைந்துவ ந்தநேரத்தில் யூ.என்.பி.அரசின் கட்டுப்பாடற் ற இறக்குமதிப் போலிப்பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட சிறு சிறு முயற்சிக ளும்சீரழிந்து விட்டன.

எமதுபிரதேசத்தில் இயற்கையிலே அமைந்து வி ட்டநீர்நிலைகளும், பரந்துபட்ட செழிப்பான நி லப்பரப்புகளும் அங்குவாழக்கூடிய எமதுமக்களை பன்னெடுங்காலமாகவே விவசாயத்துறையைச் சார்ந்த பொருளாதாரத்துடனேயே பின்னிப்பி ணைந்துள்ளது. எமது பாரம்பரியப் பிரதேசத்தி னில் 260,000ஹெக்டர் காணியில் பெரும்போ கநெல் விளைவிக்கப்படுகிறது. இது இலங்கை நெ ல்விளைச்சல் காணி விஸ்தீரணத்தில் 34%ஆகும். சிறுபோகத்தில் 80.000ஹெக்டர் காணியில் நெ ல்விளைவிக்கப்படுகிறது. இது இலங்கையின் சிறு போகவிளைச்சலில் 22%ஆகும். இக்காணிகளில் ஓராண்டில் 60.000தொன் அரிசி பெறக்கூடிய நெ ல்விளைவிப்பதற்கு சாத்தியம் இருந்தும் பேரி னவாத அரசயந்திரங்களின் வேண்டாவெறுப்பா னபோக்கினால் உரியமுறையில் தொழில்நுட்ப த்தினையும், விஞ்ஞானத்தினையும், மூலதனச் செறி வையும் பிரயோகிக்காமையாலும், திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்திற்காக விவசாயக்காணி கள் பறிக்கப்பட்டமையாலும் இன்றுவரை உணவி ல்தன்னிறைவு பெறமுடியாது போய்விட்டது. சில குறிப்பிட்ட விலைமதிப்பு வாய்ந்த விவசாயப் பொருட்கள் இருந்தும் பேரினவாத அரசுகள் பா ராமுகமாகஇருந்து வருகின்றது. யாறாக உபஉண வுப்பொருட்களான உருளைக்கிழங்கு, வெண்காய


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம்,மிளகாய்போன்ற பொருட்களைச் சந்தைப்படுத்தமுற்படும் வேளையில் வெளிநாடுகளிலிருந்துமிப் பொருட்களை இறக்குமதி செய்து உள்ளூர் உற்பத்திமுறைகளைச் சீர்குலைக்கும் போக்கு பேரினவாத அரசால் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

எமதுபிரதேசத்தில் பெருந்தொகையான வருவாயைப்பெற்றுக் கொடுக்கக்கூடிய மற்றுமொரு பாரிய பரந்துபட்ட தொழில்துறை கடல் தொழிலாகும். எமது பிரதேசத்தில் இலங்கையின் கடற்பரப்பின் 60%இற்கு அதிகமான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.இலங்கையின் மீன் பிடிக்கு உகந்த கடல் பரப்பில் 60%த்தை எமது பிரதேசம் கொண்டுள்ளது.இவ்வகையான வாய்ப்புக்களும் வசதிகளுமிருந்தும் தமிழ் பிரதேசம் என்ற காரணத்திற்காக இத்தொழில்துறையை நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்வதில் அக்கறையின்மையாக இருக்கின்றது. திட்டமிட்ட ரீதியான குடியேற்றத்திட்டங்களுக்கு பாவிப்பதற்கு காலநிலைக்கேற்ப மீன்பிடிக்கும்,இடங்களை மாற்றிக்கொள்ளும் சிங்களக் கடற்தொழிலாளர்களை எமது பிரதேசத்தில் மிகவும் அக்கறையுடன் குடியமர்த்தி வருகிறது.இவ்வகையான போக்குகளும் கடற்தொழில்துறையின் வளர்ச்சியை மிகவும் பாதித்துள்ளது.

மன்னார் கடற்கரைப்பிரதேசத்தில் எண்ணை வளத்திற்கான சாத்தியங்கள் இருப்பதாக கருதப்படுகின்ற போதும் அதற்கான முயற்சிகள் பேரினவாத அரசுகளால் மேற்கொள்ளப்படவில்லை. திட்மிட்ட கல்வித்திட்டத்தினாலும் தமிழ்சமூகத்தின் கல்வி வளர்ச்சியாலும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது இப்பேரினவாத அரசு. எமது சமூகத்தின் தொழிற்துறை,கல்வி,அரசியல் போன்றவற்றின் வளர்ச்சிப் பின்னடைவுக்கு தரகுமுதலாளித்துவ பேரினவாத அரசுகளும் ஒருவகையில் காரணமாகும்.

## 3. எமது சமூகத்தில் பெண்விடுதலை.

எமது சமூகத்தில் சரி பாதியினருக்கு மேலாக இருக்கும் பெண்கள் ஒடுக்கு முறைக்கு பாரதூரமாக முகங்கொடுக்க வேண்டியுள்ளது.ஆண்மேலாதிக்கம் என்கின்ற அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்ற தனியுடமைச சமுதாயத்திற்கு சேவகம் செய்வதற்கும் அதைக் கட்டிக் காப்பதற்கும் பெண் ஒடுக்குமுறை மிகவும் தேவைப்படுகின்றது.பெண்என்பவள் எமது சமுதயச்சந்தையில் விலை கொடுத்து விற்கப்படும் வியாபாரப் பொருளாகவே கருதப்படுகிறாள்.இக்கட்டமைப்பைக் கட்டிக்காப்பதற்காக ஆண்என்பவன் தன்னைவிபச்சாரம் செய்கிறான் என்பதைப் பெரும்பான்மையான ஆண்கள் சிந்திக்கத்தவறிவிடுகின்றனர்.வீரத்திலும்,அறிவிலும் பெண்கள் ஆண்களுக்குக்கீழானவர்கள் என்ற கருத்தோட்டம் சமூகக் கட்டமைப்புகளில் இழையோடி இருப்பதால்,எமது சமூகவளர்ச்சியில் பெண் இனத்தின் நேரடியான பங்களிப்புக்கு சமூக அங்கீகாரம் இல்லாமையால் அவர்களுடைய செயல்பாடுகள் குறுகிய வரையறைக்கட்பட்டே அமைந்து விடுகின்றது. இதன் காரணமாக பெண்களிலிருந்து அறிஞர்களையோ அல்லது சிந்தனையாளர்களை யோசமூகத்தின் வளர்ச்சிக்கு தோற்றுவிக்கமுடியாததடைக்கற்களாகிவிடுகின்றது.

## 4. கலவையாக்கப்பட்டு விட்ட பிற்போக்குவாத காரணிகள்

மதம்,கலாச்சாரம்,பண்பாடு,மூடநம்பிக்கை, பிரதேசவாதம் என்கின்ற பிற்போக்குவாதக் காரணிகள் யாவும் எமது சமூக வளர்ச்சியைபின்னோக்கி நகர்த்திவிட்டன. ஒருபெண் நீண்டகாலம் ஆகத்தாய்மை அடையவில்லையென்றால் அதற்கான குறைபாடுகளையும்,நிவர்த்திகளையும்விஞ்ஞான பரிசோதனையினூடாக தீர்வுகாணமுற்படாது பிள்ளையார் சிலையை ஒருநாளுக்குப் பத்துத்தடவை சுற்றிவந்தால் குழந்தைகிடைத்துவிடும் என்கின்ற மனோபாவம் இவ்விஞ்ஞானயுகத்திலும் இருக்கிறதென்றால் எமது சமூகத்தின்மூடநம்பிக்கையின் மொத்த உருவத்தையும்,மதத்தின்மீது இருக்கின்ற அதீதநம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றது என்றே எண்ணவேண்டியுள்ளது. ...கலாச்சாரம்,மூடநம்பிக்கை,பிரதே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ᵾவாதம்போன்ற காரணிகள் சுயஇலாபங்களு ꜗகாகசமூகத்தின் மனிதநேயத்தை அழித்தும், சமூகங்களுக்கிடையில் குரோதங்களையும், அவ நம்பிக்கைகளையும் தோற்றுவிப்பதில்பெரும் பங்காற்றிவருகின்றது. குறிப்பாக குடாநாட்டு

மனோபாவமும், தனித்துவக்கண்ணோட்டமும் பிரதேசவாதங்களைக் கிளப்பிவிட்டிருந்தன. குறிப்பாக மட்டக்களப்பில் உருவாக்கப்பட்டி ருந்த யாழ் அகற்றுச் சங்கம், கிழக்குக்க வேலை க்குச் செல்லும் குடாநாட்டுமக்களுக்க எதிராக இச்சங்கம் போர்க்கொடி உயர்த்தியது. இதில் தானைத்தமிழன் காசி ஆனந்தனும் அங்கம்வகித் தார். இவர் பின்பு தமிழீழம்பற்றி முழக்கமிட்ட துவேடிக்கையானது. இதேபோல் வன்னியிலும் உ ருவாக்கப்பட்டது. இவைகளின் பின்னணியில் இப் பிற்போக்கவாத காரணிகள்யாவும் அடங்கியி ருந்தமையால் சமூகம் விழிப்புணர்ச்சிஅடைவத ற்குப்பதிலாக பின்னோக்கி நகர்ந்துள்ளது.

## 5. முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறைக்கான கல்வித்திட்டம்.

காலனித்துவ வாதிகளால ஆரம்பிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட கல்வியமைப்பின் முறையி னூடாகமுதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறையே இன்று வரை கட்டிவளர்க்கப்பட்டு வருகி ன்றது. குறிப்பாக குடாநாட்டில் உருவாகிய பா டசாலைகளில் இலவசக்கல்வியினூடாக பெற்று க்கொண்ட கல்விஅறிவை மேற்கத்தையமுதலா ளித்துவத்தின் வளர்ச்சிக்க விற்று தம்மை ஏக போகமாக்கிக் கொண்டவர்களே எம்தமிழர் கள். முதலாளித்துவ பொருளாதார அமைப்புமு றையை பாதுகாத்துக் கொள்வதற்காக திட்ட மிட்டரீதியாகப் புகுத்தப்பட்ட இக்கல்வியமை ப்புமுறையில் எமது சமூகம் பற்றியபார்வையோ அல்லது எமது சமூகத்தின் தேவைகளையோ கோ டிட்டுக் காட்டவில்லை என்பதேஉண்மையாகும். ஆங்கிலப் பாடசாலைகளில் கல்விகற்று எழுது விளைஞர்களாக தெற்கில் தொழில்வாய்ப்பி னைத்தேடி நகர்ந்த குறிப்பிடத்தக்க மத்திய தரவர்க்க தமிழர்கள் தமது நிலப்பிரபுத்துவ

சங்கங்களினூடாகவும், போராட்டங்களினூடா கவும்சமூகம் பற்றியபார்வையை வளர்த்தெடுத் தனர். உண்மையில் இவ்வகையான மாற்றங்களை நிலப்பிரபுத்துவ எச்சசொச்சங்களிலுமிருந்து விடுபடமுடியாத எமதுசமூகப்பிரமுகர்களால் ஜீரணிக்கமுடியவில்லை. இப்பிரமுகர்களின் த டைகளினால் ஏற்படவிருந்த சிறு சிறு மாற்ற ங்கள்கூட நடைமுறைப்படுத்த முடியாதுபோயுள் ளது.

இதுவரையில் எமதுசமூகத்தின் வளர்ச்சியின்பி ன்னடைவுக்க ஆண்டான் அடிமை முறையினூடாக வளர்த்தெடுக்கப்பட்ட தனியுடமைச் சமுதாய அமைப்பும், பிற்போக்கவாத சிந்தனையோட் டங்களும், தரக முதலாளித்துவ பேரினவாதஅ ரசுகளின் திட்டமிட்ட அரசியல், பொருளாதா ர, கல்விஒடுக்குமுறைகளும் அகரீதியான கார ணிகளாகக்கண்டறிந்தோம்.

## புறரீதியான காரணிகள்.

புறரீதியான காரணிகள் எமது சமூகத்தின் வ ளர்ச்சியை பாரிய அளவில் பின்நோக்கவில் லைஎன்றாலும் காலனித்துவவாதிகளின் வருகை யால்எமது இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டது ம், தொழில்துறையில் விவசாயஅபிவிருத்தி யைத்தடைப்படுத்தியது உண்மையானாலும்பண் டையகால மரபுகளையும், நடைமுறைகளையும் கொண்ட இலங்கை புதிய இலங்கையாக மாறு வதற்கு காரணமான பெருந்தோட்டப் பொரு ளாதாரமுறை புகுத்தப்பட்டதின் பயனாகவே தான் பொருளாதாரம் மற்றிலும் புதியதொகு பாதையில் அடியெடுத்துவைக்கமுடிந்தது. இதனா ல்சமுதாய அமைப்பிலும் நல்ல மாற்றங்கள் ஏற் பட்டன. அதன் பயனாகஅரசியல் மாற்றங்களும் ஏற்பட வழிபிறந்தது. வெளியுலகை அறிந்து கொள்ளவும், வெளியுலகில்ஏற்படும் மாற்றங்க ளும், வளர்ச்சிகளும் எமது சமூகத்தில் சிறு சிறு அளவிலாவது தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவி

www.tamilarangam.net

ல்என்றுசொல்லமுடியாது போனாலும் சமூகவிஞ்
ஞானம்பற்றிய அறிவுகளும்,முற்போக்கான சி
ந்தனைகளும் வளர்வதற்கு உதவியதென்றால் மி
கையாகாது.எம்சமூகத்திலுள்ள புத்திஜீவிகள்
மேற்குலகத்தின் வளர்ச்சிக்கு முண்டு கொடுக்
கநகர்ந்து கொண்டிருந்த வேளையில் சிங்கள
மக்கள் மத்தியிலுள்ள குறிப்பிடத்தக்க புத்தி
ஜீவிகள் மேற்கத்தைய பல்கலைக்கழகங்களில்
கல்வியைக்கற்று தத்தம் துறைகளில் நிபுணர்க
ளாக விளங்கிய போதும் மார்க்சிய வரலாற்
றினை ஐயத்திரிபுறக்கற்று சர்வ தேசரீதியி
ல்திறனாயவல்ல சிந்தனையாளர்களாக பலர்
விளங்கினர். இவர்களில் பிலிப் குணவர்த்தனா
என்.எம்.பெரேரா,கொல்வின் ஆர்.டி.சில்வா,
எஸ்.ஏ.விக்ரமசிங்க போன்றோர் இலங்கைப்
பல்கலைக்கழக மாணவரிடையே மார்க்சிய
சிந்தனைகளை வளர்த்தெடுத்தனர்.ஆனால் மறு
புறத்தில் மேற்கத்தைய ஏகாதிபத்திய வல்ல
ரசுக்கூட்டமும் அது சார்ந்த கடன் விநியோக
நிறுவனங்களும் மறுபேச்சின்றி தமது நலன்களு
க்கு சரணடையும் இலங்கையின் தரகு முதலாளி
த்துவத்திற்கு தமது பரிபூரண ஆதரவை வழங்கு
வதுடன்,தமது திட்டத்தின்படியே கொடுக்கப்ப
டும்கடன் உதவிகளையோ அல்லது நன்கொடை
களையோ பாவிக்கவேண்டுமென்ற நிபந்தனை
களையும் ஏற்படுத்தி வருகின்றனர்.இதன் கார
ணமாக எமது மக்களினதும் மண்ணினதும் தே
வைகளுக்கமைய பொருளாதாரத்திட்டங்களை
மேற்கொண்டு முன்னேறவிடாது மக்களின்அடிப்
படை வாழ்க்கைத் தரத்தை ஒருபோதும் அடை
ந்திட முடியாதவாறு உருப்படாத நாடுகள்என்
னும் நாமத்தைச் சூட்டி தனதுநலனையே முதன்மை
ப்படுத்தி செயல்பட்டு வருகின்றது.மேற்கத்தை
யவல்லரசுக்கூட்டமும் அதன் கூட்டாளிகளும் இலங்
கையின்ஆளும் தரகு முதலாளித்துவக்கூட்டமும் த
மக்கு வேண்டியவர்கள் என்பதால் இத்தரகுமுத
லாளித்துவத்தின் ஆட்சியை நீடிப்பதற்கு நாட்
டின்ஏதேனுமொரு ஒருபகுதியை அடக்குமுறையி
ல்வைப்பதால் காரியத்தைச் சாதிக்கமுடியும்
எனில் அதுவே விரும்பத்தக்கது.இதனை நடைமு

வைப்படுகின்றது என்பதையும் மேற்கத்திய வல்
லரசுக்கூட்டம் கொள்கைரீதியாக ஏற்றுக் கொ
ள்கின்றது.எமது தரகு முதலாளித்துவம் தனது
வெளியுலகக் கூட்டாளிகளுக்காக திறந்த பொ
ருளாதாரக் கொள்கை ஒன்றைக் திறந்துவிட்டு
ள்ளது.வரிச்சலுகையுடைய சுதந்திர வர்த்தக
வலயத்தினூடாகவும்,மற்றும் இதர சுரண்டல் தி
ட்டங்களினூடாகவும் எமது மக்களின் உழைப்பு
சக்தியையும்,எமத மண்ணிலிருந்து கிடைக்கப்
படும்பெறுமதி இயற்கை வளங்களையும்,மூலப்
பொருட்களையும் சுரண்டிச் செல்வதற்கு உதவி
யுள்ளது.மறுபுறத்தில் இச்சுதந்திரவலயத்திலுள்
தொழில் புரியும் தொழிலாளர்கள் தமது உரி
மைகளுக்காக போராடமுடியாதவாறு கொடு
மையான சட்டங்களையும் இச்சுரண்டல் கூட்டங்க
ளுடன் இணைந்துசெயல்பட்டு வருகின்றது. தென்னி
ந்தியாவின் சினிமாக்குப்பைகளும்,தரங்கெட்ட
சஞ்சிகைகளும் எமது சமூகத்தில் ஏற்படக்கூடிய
சிறு சிறு மாற்றங்களைத் தன்னிலும் ஏற்படவி
டாதுதடை செய்து வருகின்றன.
ஒட்டு மொத்தமாக தமிழ்பேசும் சமூகத்தின்
வளர்ச்சிநிலையைக்குறிப்பிட்டுச் சொல்லும
ளவுக்கு நாம் எத்துறையிலும் வளர்ச்சியடையவி
ல்லை.எமது வளர்ச்சியானது உறங்குநிலையிலே
யேதான்இருக்கின்றது. ஒருபுறம் பேரினவாதிக
ள்தமது வெளியுலகக் கூட்டாளிகளின் துணையுடன்
திட்டமிட்ட அரசியல்,பொருளாதார கல்விரீ
தியானஒடுக்கு முறையும்,மறுபுறம் எமது சமூகத்
தில் புரையோடிப் போயிருக்கும் பிற்போக்
குவாத காரணிகளுக்கு எதிரான வர்க்சுக் கு
ணாம்சமோ அல்லது போராட்டக் குணாம்ச
மோஅற்ற நிலையும் எமது சமகால வளர்ச்சி
யைப்பின் நோக்கித் தள்ளிவிட்டன.
கல்தோன்றி,மண்தோன்றாக் காலத்தில் தோ
ன்றிய இளம் தமிழினம்,இராமாயண காலத்தி
ல்புஸ்பக விமானம் பறந்தது என்ற கற்பனைக்
கொவ்வாத கதைகளைத் தினம் தினம் வாய்க்
குள்முணு முணுப்பதை விட எமது சமூகத்தின் இன்
றைய நிலை என்ன(?)என்பதைநாம் அனைவரும்
சிந்திக்வேண்டும். உலகில் ஏற்பட்டுக் கொண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதுஎமது சமூகம் தனக்கே ஒரு குறுகியவட்டத்தைப் போட்டுக்கொண்டு கண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருக்கிறோம்.
கலை,இலக்கியப் படைப்புக்கள்,மக்களுக்கான தேவைகளையும் அவைகளைக் கண்டறிவதற்கான பாதைகளையும் தோற்றுவிக்கின்றன. 16ம்நூற்றாண்டில் சேக்ஸ்பியரின் படைப்புக்கள் ஐரோப்பிய சமூகங்களுக்கு மறுமலர்ச்சியைஏற்படுத்த உதவியது. ரூசோ,வால்ட்டோ போன்றவர்களின் படைப்புகள் பிரான்சிய புரட்சிக்கு வித்திட்டது. டால்டா,மார்கீம் கார்க்கி,மாவோவோஸ்கி போன்றவர்களின் படைப்புக்கள் ருஷ்சியப் புரட்சிக்கு வித்திட்டதோ அதே போல் எமது சமூகத்தையும் முன்னோக்கி நகர்த்தக்கூடிய கலை இலக்கியப் படைப்புக்களையே எமது சமூகம் வேண்டிநிற்கின்றது. எமது சமூகத்தில் 9ம்,10ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்ட பக்தி இலக்கியங்கள்தான்சமூகத்தில் வளர்க்கப்பட்டதே ஒழிய சமூக மாற்றங்களுக்கான புரட்சிகர இலக்கியங்கள் குறிப்பிடக்கூடிய வகையில் வளர்த்தெடுக்கப்படவில்லை. தேசிய விடுதலைக்கான போராட்டகால கட்டத்திலும் எமது போராட்டம் 83இன் திடீர் பாய்ச்சல் காரணமாகவும் அதன் விளைவுகளால் ஏற்பட்ட அராஜகப் போக்குகளாலும், சமூகவளர்ச்சிக்கான இலக்கியங்கள் வளர்த்தெடுக்கப் படமுடியாதுபோயுள்ளது. அதே வேளை ஐரோப்பிய மற்றும் இதர நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ள எமதுமக்களின் போக்குகளும் சிந்தனைகளும் ஐரோப்பிய சமூகத்திலுள்ள பிற்போக்குத் தனமான செயற்பாடுகளையும்,சிந்தனைகளையும் உள் வாங்கிக் கொண்டார்களே ஒழிய இம்மக்களிடமுள்ள நல்ல அம்சங்களை உள்வாங்கிக் கொள்ளவில்லை. ஆகவே நாகரீகவளர்ச்சியடைந்த,சமூக வளர்ச்சியில் முன்னேறியுள்ள இம்மக்களிடமிருந்து கற்க விரும்பாத இம்மக்கள் எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு பயன்படாதவர்களாகவே யதார்த்தமாகவுள்ளது. இந்நிலையில் ஈழத்தின் சமகால வளர்ச்சியானது அங்கே இருக்கக் கூடிய மக்களால்தான் வளர்த்தெடுக்கப்படமுடியும். அதற்கு முதல் தேசிய ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுவதுடன் அதே கட்டத்தில் சமூக மாற்றத்திற்கான போராட்டமும்முன்னெடுக்கப்பட வேண்டும் இது ஒரு நாணயத்தின் இருபக்கம் போன்றது. இதற்கு ஜனநாயகபூர்வமான கருத்துக்களையும் புரட்சிகரமான இலக்கியப் படைப்புகளையும் உருவாக்குவது இங்குவெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளின் ஆக்கதாரர்களின் வரலாற்றுக் கடமையாகும். இவ்வாய்வு முற்று முழுதானது என்று யாரும் கருதிட வேண்டாம். எனது கணிப்பின்படி எமது சமூக வளர்ச்சிக்கான பார்வையின் முதற்படியாகவே கருதுகிறேன்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## என்ன சொல்கிறார்கள்?

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் தனதுகண்ணோட்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு பாலபாஸ்கரன் பத்திரிகைகளை விமர்சிக்கின்றார். பத்திரிகைகளில் உள்ள நல்ல விடயங்களைகிட்டமிட்ட ரீதியில் மழுங்கடித்துள்ளார். குறிப்பாக 'வெகுஜனம்' சாதியொடுக்குமுறைக்கு எதிராக உறுதியாக எழுதிவரும் ஒரு பத்திரிகை. இவற்றையெல்லாம் இவர் இருட்டடிப்பு செய்துள்ளார்.

பொது இலக்கிய சந்திப்பில்
சிவபாலன்.

www.tamilarangam.net

# ங்கள் பக்கம் – உங்கள் பக்கம் – உங்கள்-பக்கம் -உ

நீங்கள் எங்கள் நாட்டில் கஷ்டப்படும் மக்களுக்கு உதவுங்கள், அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று உங்கள் பத்திரிகையில், இல்லை எல்லாப் பத்திரிகையிலும் வெளியிடுகிறீர்கள். நீங்கள் அப்படி வெளியிடுகிறீர்கள் ஆனால் எங்கள் தமிழர்களோ கொஞ்சம்கூட அக்கறையில்லாதவர்கள் போல் இருக்கிறார்கள். 7.10.90அன்று என்றூமிற்கு பக்கத்து றூமில் எங்கள் நாட்டில் நடக்கும் சண்டைகளை படம் எடுத்து விற்கப்பட்ட கசற்றை வீடியோவில் எல்லோரும் பார்த்தார்கள். அதில் அழிவுகள் சேதங்கள் போட்டார்கள். பார்த்தவர்கள் ஆருக்கு ஆள், ஆ..பாவம் ஐயோ இப்படிச் செய்கிறார்களே என்று வருத்தப்பட்டனர்.

திடீரென்று பிரச்சனைகாரணமாக சாக்கில் சட்டிபானையை ஒருத்தர் போட்டுக்கொண்டு ஓடுவதைக் காட்டினார்கள். அதைப்பார்த்துக் கொண்ட ஒரு பதினாறு வயதுப்பையன் சிரித்துவிட்டான். அவ்வளவுதான் எல்லோரும் ஏசினார்கள். உனக்கு என்ன தெரியும் சிரிக்கிறாய். உடனே பையன் நான் சிரிக்கிறேன் நீங்கள் ஐயோ பாவம் என்கிறீர்கள். பாவம் என்று சொல்லாமல் கொஞ்சப் பணம் அனுப்புங்கள் பார்ப்போம். எல்லோரும் ஒன்றும் கதைக்கவில்லை. அடுத்து எம்மக்கள் துயரத்தை போக்க உதவி செய்யுங்கள் என்று கூறிஒரு காலில்லாத சிறுவனை வீடியோவில் காட்டினார்கள். உடனே பக்கத்தில் இருந்த பெண்மணி கூறினார் ஏன் காலில்லாத சிறுவன் ஜேர்மனியிலும் இருக்கிறான்தானே இதைப்போய் காட்டுகினம் என்றார். உடனே எல்லோரும் ஆம்என்று தலையாட்டினர். வீடியோவில் முதல் இங்கிலீசில் சொல்லி பிறகு தமிழில் சொன்னார்கள். பிரச்சனை பற்றி வீடியோவிலும் எங்கள் தமிழ் இரண்டாவது இடத்திற்கு போய்விட்டதைப் பார்க்க கவலையாக இருந்தது. அந்தப்படம் பார்க்கப்போட்டவரிடம் கூறினேன் இங்கிலீசை ஓடவிட்டு போடுங்கள்என்றேன். உடனே அதிலிருந்தவர்கள் ஏன் இது விளங்கவில்லையோ என்றார்கள். பிறகு பிரச்சனை பற்றி சொன்னபோது அதை ஓடவிட்டார்கள். இதில் என்ன அதிசயம் என்றால் வீடியோ பார்த்த அனைவருக்கும் இங்கிலீசு தெரியாது. எங்கள் ஊர்ப் பெயர்களையும் வீடியோவில் சொன்னார்கள். அதைப்பிடித்து இங்கிலீஷ்தெரிந்தமாதிரிஅங்குபிரச்சனை இங்கு பிரச்சனையென்று கதைத்தார்கள். இவர்களெல்லாம் தாங்களும் ஆங்கில லோயர்கள் மாதிரி நினைக்கிறார்கள் போல் இருக்கு. இவர்கள் இப்படியே ஐயோ பாவம் என்பதைத் தவிர வேறு எதையும் செய்ய மாட்டார்கள். இதில் பலர் இன்னும் புலிவீரநடையென்று, கொலைகாரப் புலிகளின் பக்கம் சங்கூதுகிறார்கள். சிலர் கொஞ்சப் பணம் இவர்களிடம் கொடுத்தால் எங்கள் நாட்டுக்கு போனாலும் பிரச்சனையில்லாமல் இருக்கலாம் என்கினம். சிலர் " இனிஆர் போறது என்று காசு கொடுப்பதை விட்டுவிட்டார்கள். இவர்கள் எல்லாம் தன்னலம் கருதிகள். இதை மற்றவர்களுமுணர்ந்து இனியாவது எம்மக்களில் அக்கறை கொள்ள வேண்டுமென்று இதை உங்கள் பத்திரிகைக்கு அனுப்புகின்றேன். பிரசுரிப்பீர்கள் என நம்புகின்றேன். வெகுஜனத்தில் வரும் அத்தனையும் உண்மை அஞ்சாமல் வெளியிடும் வெகுஜனம் இனலும் செழிக்கட்டும்.

என். விஜயலட்சுமி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இம்முறை எமதுஎண்ணங்கள் நன்றாயுள்ளது. தோழர்களின் வாழ்க்கை குறிப்புகள் இடம் பெற்றதாய் வழமையான விடயங்கள் இல்லாமல் இருப்பது குறையாக உள்ளது. ஆயினும் தோழர்களின் அரசியல் வாழ்வினைப் பற்றி அறிய ஆர்வமுள்ளவர்களுக்கு வெகுஜனம் நல்லதொரு வாய்ப்பினை அளித்துள்ளது ஏனைய விடயங்களை ஆர்வமாகப் படித்ததால் சிறுகதையைப் படிக்க முடியவில்லை. அந்த மாலைப் பொழுதில் என்னும் தலைப்பு தோழர்களின் அஞ்சலிக் கூட்டத்திற்கு ஏற்றதாக இல் லை.

வி. பிரகலாதன்,
அயர்லாந்து.

எனது நண்பன் ஒருவன் மூலம் இறுதியாக வெளிவந்த வெகுஜனத்தை வாசிக்க முடிந்தது. வெகுஜனத்தில் வெளிவரும் ஆக்கங்கள் தரமானவையாக இருப்பினும் எழுத்துக்கள் தெளிவின்மையால் அவை தரமற்றுப் போகின்றன. தயவுசெய்து இந்தக் குறையை விரைவில் நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வெகுஜனத்தில்வெளியாகும் 'சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல்' மிகவும் நன்றாக இருக்கிறது. இதைச் சிறப்பாக எழுதிவரும் ஆனாக்கு எனதுபாராட்டுக்கள். வன்னியூர் லெனின் எழுதிய 'இவர்களும் காவலர்கள்' என்ற சிறுகதையில் எழுதப்பட்டது போல ஈழத்தில் சில பிரச்சனைகள் நடக்கின்ற போதும் அவைமக்களுக்கு தெரிவதில்லை. இது உண்மைக் கதையாக இருக்குமோ என்ற ஐயப்பாட்டையும் எழுப்புகிறது. வன்னியூர் லெனினுக்கு எனது பாராட்டுக்கள். போல் அவர்கள் எழுதிய அஞ்சலிஎன்ற கவிதையும் பாராட்டத் தக்கது. வெகுஜனத்தில் இருக்கும் சிலகுறைகளை நிவர்த்தி செய்வீர்களானால் ஐரோப்பிய சஞ்சிகைகளுள் வெகுஜனம் முக்கியமான இடத்தைப் பிடிக்கும் எ பதில் சந்தேகம் இல்லை.

சுரேஷ் வவுனியன்.
லண்டன்.

ர் பக்கம் . உங்கள் பக்கம் . உங்கள் பக்கம் உங்கள் பக்கம் உங்கள் பக்கம் . உங்கள் பக்கம் உங்கள் பக்

## என்ன சொல்கிறார்கள்?

தோழர் ஸ்டாலினதும், தோழர் மாவோவினதும் மரணங்களையடுத்து சோவியத்யூனியனிலும், சீனாவிலும் முதலாளித்துவம் புகுத்தப்பட்டு விட்டது.

9வது இலக்கிய சந்திப்பில்
'மனிதம்' ஆசிரியர்குழு.

ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லருக்கு ஒப்பான மனிதப்படுகொலைகளுக்கு காரணமான மக்கள் ரோதி ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா ஒரு புரட்சியாளனாம், இவரின் கொலையைக் கண்டிக்காதவர்கள் எதிர்புரட்சிகரசக்திகளின் முகவர்களாம் என்று சிந்தனை எழுதியுள்ளது.

9வது இலக்கிய சந்திப்பில்
வி. நடராஜன்.

காலையில் இங்கு வரும்போதுகூட எனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. எனக்கும் நிம்மதியில்லை, மக்களுக்கும் நிம்மதியில்லை. எனது போட்டோவை பத்திரிகைகளில் பெரிதாக வெளியிடுங்கள். ஏனெனில் இதுவே எனது இறுதியுரையாக இருக்கலாம்.

முஸ்லிம் அசெம்பிளி மாநாட்டில்
தில்லைநாதன். எம். பி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விமர்சனத்திற்கு ஒரு விமர்சனம்

ஆ.வேலாயுதம்

மனித சமுகத்தில் தனிமனித சுதந்திரம்
பேணப்படுவதை உறுதிப்படுத்தும் அடிப்படை உரி
மைகளின் அலகுகளை அளக்கும் கருவியாக விமர்
சனத்தைக் கைக் கொள்ளலாம். சமூகவியல் அரசி
யல் பொருளியல் இலக்கியம் கலை என்னும் பல
வகையான அம்சங்களையும் விஞ்ஞான பூர்வமாக
ஆய்வுக்குள்ளாக்கி வளர்ச்சியின் படிக்குக்
கொண்டு வருவதில் விமர்சனம் முக்கிய பங்கை
வகிக்கிறது. ஆகவே இதுவும் இன்று ஒரு தனிக்
கலையாக மனித சமுகத்தில் பரிணாமம் பெற்
றுள்ளது. இது பற்றி முழுஆய்வினை நடத்துவது இக்
கட்டுரையின் நோக்கம் அல்ல. ஆனால் விமர்ச
னம் என்றால் என்ன? ஆரோக்கியமான விமர்
சனம் எப்படி இருக்க வேண்டும்? விமர்சனத்தின்
நோக்கம் என்ன? யார் சிறந்த விமர்சகராக
முடியும். இவ்வாறான விமர்சனங்களால் நன்மை
பெறுபவர்கள் யார்? என்பவைகளை சற்று உற்று
நோக்குவோம்.

எழுத்துக்களோ அன்றிக்கருத்துக்களோ அல்லது
அவைகளைச் சுமந்து வரும் சஞ்சிகைகளோ அத
ன் ஆக்கங்களோ விமர்சிக்கப்படுவது அவைகளி
ன் வளர்ச்சிக்கான ஒருதேவையாகவே காணிக்க
ப்படுகின்றது. இங்கே இவைகள் தேவையின் அவ
சியம் கருதி விமர்சிக்கப்படுகின்றதா? அல்ல
து வளர்ச்சியின் தேவை கருதி விமர்சிக்கப்
படுகின்றனவா? என்பதும் கேள்வியே. தேவை
யின் அவசியம் கருதிசெய்யப்படும் விமர்சனத்
தில் பிழைகள் மட்டும் சுட்டிக் காட்டப்பட்டு
எழுத்துக்கள், கருத்துக்கள் அவைகளுக்காகவும்
சஞ்சிகைகள் பற்றிய பிழையான முடிவை வெளி
க்கொணர்வதுடன் அவைகளைச் சமூகத்திற்கு
வேண்டாதவைகளாக்கியும் விடலாம். வளர்ச்
சியின் அவசியம் கருதிச் செய்வதானால் நகம்
நனையாது நத்தை பிடிப்பவர்கள் போல் நல்ல
வைகளை மட்டும் நாசுக்காக எடுத்துக் கூறி அல்
லவைகளை மறைத்து விடுவதன்மூலம் வாசகர்கள்
மத்தியில் நல்லெண்ணங்களை எற்படுத்தி அவை
களுக்கு நற்சான்றிதழ்களை வழங்குதலையும்
விமர்சனமாகக் கொள்ளலாம்.

ஆரோக்கியமான விமர்சனம் என்பது அவ்
வாறல்ல. நட்பு, முகமன் என்ற எல்லைகளுக்கப்
பால் தயவு தாட்சண்யம் இன்றி கட்டுரையோ
சிறுகதையோ, ஆசிரியர் கருத்தோ கூறும் முழு
விடயங்களும் வெளிவந்த காலத்தில் தேவை சூ
ல் என்பவைகளை உற்று நோக்கி அந்தந்த நேர
ங்களிலேயே விமர்சிக்கப் பட்டிருக்கவேண்டும்
அவ்வாறு அக்குவேறு ஆணி வேறாக எடுத்துப்
பிய்த்துப்போடப்படுவதன் மூலம் எழுத்தும் கருத்
தும் மக்களுக்கு இனம்காட்டப்படும். இதன் மூலம்
விமர்சகரும் தன்னை இனங்காட்டிக்கொள்வார்.
இந்த ஆரோக்கியமான விமர்சகர் சிறந்தவா
சகராயும் இருப்பார். சிறந்த வாசகரல்லா
தார் சிறந்த விமர்சகராக முடியாது. மேற் கூ
றிய சிறப்பம்சங்களை திரு வி. நடராசனிடம்
காணமுடிகிறதா?

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்
கரைபோல். விமர்சகர் இல்லாத ஜேர்மனியி
ன் தமிழ் எழுத்துலகிற்கு திரு வி. நடராசன் 9வ
இலக்கியச் சந்திப்பில் ஜேர்மனியில் வெளியா
கும் சஞ்சிகைகளும் கலந்துரையாடலும் எனும் நி
கழ்ச்சியில் அவரால் விமர்சிக்கப்பட்ட சஞ்சி
கைகளுள் ஒன்று தான் முழுமையான ஆரோக்கிய
மான விமர்சனத்திற்கு உட்படுத்தப்படவில்லை.
இது அவரது கன்னிமுயற்சி. பேச்சு நடை நயமும்
நளினமும் நிறைந்த சொல் லாட்சியுடனிருந்த
சோர்வடையாத தன்மையும் தனக்குப் பின் சஞ்
சிகையாளர் பதில் அதன் பின் வாசகர்கள் கரு
த்து என்ற ஆளுமையான வேண்டுதலுடன் எல்லோ
ரையும் தன்னுடன் இணைத்து வைத்திருந்த அணுகு
முறைகளை வியக்காமலும் இருக்க முடியாது. இ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளும் அவர் செய்தது விமர்சனமா, விசனமா? பதை தொட்டும் விட்டும் சென்ற சஞ்சிகை ன் கருத்து வாயிலாகவும் அவர் அக்கருத்துக் ள இனம்காட்டிய வகை முறையாலும் அறியக் டக்கின்றது.

அவர் ஜேர்மனியில் வெளியாகும் எல்லாச் சிகைகளின் பெயர்களையும் தெரிந்து வைத் ந்தார் என்பதை அவர் விமர்சனம் செய்த றயிலிருந்து அறிய முடிகிறது. சிந்தனை குஜனம், தேனி, அக்கினி, ஏகலையா என்பன அவ முதற் தெரிவிற்குள் வந்ததால் முதற் கட்ட க விமர்சிக்கப்பட்டன. வெள்ளாடு அங்கொரு இங்கொரு கடி கடிப்பது போன்ற ஒருமேச்ச பார்வையில் தனது சார்பு நிலையில் நின்று கங்களில் சொல்லப் பட்டவற்றை முழுமையா வெளிக்கொண்டு வராது தனக்குத் தேவையா வகளை மட்டுமே எடுத்துக் கொண்டதாலோ லது இவைகளை மட்டும் எடுத்துச் சொன்னாற் ன் வரவேற்புக்களும் பலத்த கரகோசமும் டைக்கும் என்பதைத் தெரிந்து கொண்டமை ாலோ என்னவோ பலத்த கரகோசங்களை பாராட்டுக்களையும் பெற்றார். இவ்வாறா ஆதரவாளர்களின் கரகோசமும் கடந்தகால ரம்பரிய அரசியற் தலைமைகளின் பேச்சுக் ளைக் கேட்டு மக்கள் கரகோசம் செய்ததைப் போன்றிருந்தது.

அடுத்த கட்டமாக தூண்டில், புதுமை, தம ரல், தளிர், சிறுவர்அமுதம் என்பவைகளில் வி சகர் தான் கண்ட நல்லவிடையங்களை விதந் ரைத்து அவைகளை வருடிக் கொடுத்ததுபோல் வைகளின் மறுபக்கங்களையும் காண்பிக்காம சான்றிதழ்களை வழங்கியமை விமர்சனத்தி நோக்கில் ஐயப்பாட்டை தோற்றுவிக்கின்ற மை பயக்குமானால் பூதத்தின் மாமியாகு ம் ஒப்பந்தம் செய்யலாம். என்று "புதுமையில்" தப்பட்டிருந்த கூற்றின் பதங்களைப் பிரித்து ப்பந்தம் பற்றிய தனது கருத்துக் கருவூலங்களை ந்தி அவர்களின் பாராட்டையும் பெற்றார்.

பாராளுமன்றம் பன்றித் தொழுவத்திற்கு சமன் என்ற லெனினின் கூற்றைக் கூறி சனநாய கத்திற்கும் விளக்கமளித்தார். ஆனால் லெனின் அந்த பாராளுமன்ற முறைக்கு மாற்றீடாக எதை க்கூறினார் என்பதை எடுத்து சொல்லவில்லை. மாவோவின் கருத்துக்களையும் மழைத் தூறல் போல் பெய்து சொன்னார். எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் சார்பில் பேசுகின்றேன் எ ன்று தனது வக்கில்லாத் தன்மையையும் வாயடித் தார். யார் வேண்டுமானாலும் இன்று தமிழ் பே சும் மக்களுக்கு நான்தான் பிரதிநிதி என்று சொல்லலாம். எந்த தமிழ் மகனும் இதை எதிர் த்துக் கேட்க முடியாதளவுக்கு ஆளாகிவிட்டான்.

தமிழ் பேசும் மக்களே வலது குறைந்தவர்க ளாகி விட்டார்களோஎன்ற ஐயப்பாட்டையும் தோற்றுவிக்கின்றது. மூன்றாம் கட்டமாக கலை விளக்கு, நாணல், மண், பிரவாகம், தென்றல் போ ன்ற சஞ்சிகைகள் அவைகளின் ஆசிரியர்கள் வரு கைதராமையால் விமர்சிப்பதில் பயன் தேறா து என அவைகள் பற்றி மனம் கொள்ளாது விட்டு விட்டார்.

இனி இவரின் அடுத்த பக்கத்திற்கு வருவோ ம். கொடுக்கப்பட்ட தலைப்பிற்கிணங்க இவரா ல் சஞ்சிகைகள் விமர்சிக்கப்படவில்லை. இங்கு வெளிவரும் சஞ்சிகைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். சுதந்திரமானவை, (சு) தந்திரமான வை, அந்தரமானவை, இவைகள் யாவும் சமூக அரசி யல், பொருளியல், கலை, சிறுவர் இலக்கிய, மாத இருமாத, காலாண்டு இதழ்களாக வெளிவருகின் றன. இவைகளில் தமது இலக்குத்தவறாது, கொள் கைமாறாது, எந்தக்கருத்தையும் யாருக்கும் அஞ் சாமல் வெளியிடும் துணிவுகொண்டவை சுதந்திர மானவை இவைகள் வாசகர்களின் தயவுடன் சொ ந்தக் கால்களில் நிற்பவை. ஏனைய இரண்டும் சந்தர்ப்பவாதத் தன்மை கொண்டவை. தங்களி ன்சுயபாதுகாப்பிற்கு உத்தரவாதம் தேடுவதற் காகமக்கள், தேசம் என்ற கோஷத்தை முன்வை ப்பவை. என்றுமே சொந்தக்காலில் நிற்காதவை. தற்குறிப்புகளுக்குப் பதிலாக பிற்குறிப்புகளை த்தாங்கி நிற்பவை. இவைகளை விமர்சகர் சாட த்தவறியமை தேவைநோக்கிய கருதுகோளிற்கப் பாற்பட்டதோ எனக் கேட்கத்தோன்றுகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராடும் சுதந்திரம் மறுக்கப்பட்ட மையினாற்றான் புகலிடம் தேடி ஓடிவந்தோம். அதன் விளைவுதான் இந்த எழுத்துருவச் சஞ்சிகைகள். எத்தனை கடின உழைப்புகளின் மத்தியில் இவை வெளிவருகின்றன. என்பவைகளை மனதில் சிறிதும் கொள்ளாமல் எந்த வகையில் எழுத வேண்டும் என்பதையும் சொல்லாமல் இனிமேல் எழுதுவதற்கு வெகுஜனத்திற்கு அருகதை இல்லை என்று பாசிஸ அராஜகவாதிகளின் பாணியிலே கூறினார். இதைக் கேட்டு கரகோஷம் செய்து வரவேற்ற ஆசிரியர் குழுவினர் எத்தனை! சுதந்திர எண்ணங்கொண்ட எழுத்தாளர்கள் எத்தனைபேர் இருந்தார்கள்.

துரியோதனன்சபையில் துச்சாதனனால் பாஞ்சாலி துகிலுரியப் படும் போது உரியட்டும் என்று பார்த்திருந்த சபையோரைப் போல் இவர்களை நினைக்கத் தோன்றவில்லையா. அல்லது இவர்கள் எவருக்குமே பாசிஸம் என்பது என்னவென்று தெரியாதோ. கையில் ஆயுதங்களுடன் கபாலங்களை கழுத்து மாலையாக அணிந்தவனையே கடவுளாக கை கூப்பிவணங்கி துதிபாடும் சமூக சமய நெறியில் வந்தவர்கள் அந்த மரபு மாறுபடுவதை எப்படி ஆதரிப்பார்கள். அதற்காகப் போரிடுபவர்களை எப்படி விரும்பிக் கொள்வார்கள் என்பதை சொல்லியா தெரியவேண்டும்.

உண்மை சுடும் என்பார்கள். இதை இந்த விமர்சகரின் கடந்த காலச் சந்திப்புக்களின் நடை முறைகளுடன் பார்க்கும் போது இந்த உண்மைபுலனாகும். பேர்லினில் நடந்த வேது இலக்கியச் சந்திப்பின் போது சிந்தனை, தேனி, வெகுஜனம் என்பன விமர்சிக்கப்படத் தேவையில்லை என்று பகிரங்கமாகக் கூறினார். அதன் பின் நடைபெற்ற 7ம்8ம் இலக்கியச் சந்திப்புக்களிலும் மௌன நிலையிலேயே இருந்தார். மொதங்களின் பின் அன்று விமர்சிக்கப் படவேண்டிய ஒப்பந்தம், தேர்தல் பற்றிய ஆசிரியர் தலையங்கம், கட்டுரைகள் என்பன ஏன் விமர்சிக்கப்படவேண்டும். இதே போன்று மற்றை சஞ்சிகைகளிலும் அக்காலத்து ஆக்கங்களை ஏன் விமர்சிக்க வில்லை? மேலும் இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சியில் விமர்சனத்திற்கு என்று நேரங்கள் ஒதுக்கப்பட்டே வந்திருக்கின்றன. சந்திப்பில் கலந்து கொண்ட எவருடைய விமர்சிக்கத்தடை விதிக்கப்பட்டிருக்கவில்லை. அப்படியானால் இந்த பின்நோக்கிய விமர்சனப்பார்வையின் தேவை என்ன? விமர்சிக்கப் படும் போது சஞ்சிகைகள் எந்த அடிப்படையில் வகைப்படுத்தப் பட்டன என்ற கேள்விகள் எழுகின்றன. இது விசனப் பார்வையோ என்று ஐயுறவும் வைக்கிறது.

மேற்கூறிய காரணங்களால் விமர்சனம் என்ற போர்வைக்குள் தத்துவார்த்த சார்பு நிலைக் கருத்துக்களின் அடிப்படையில் விசனங்களேவெளிக்கொணரப் பட்டிருக்கின்றன. காலத்தின் தேவை கருதி விசனப் படாது விட்டாலும், எதிர் காலங்களிலும் இவை தொடர்வது ஆரோக்கியமாகா என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. குறைகள் இருப்பினும் விமர்சகரின் கடின முயற்சிபாராட்டிற்கரியது. அவர் தன்னைச் சுயவிமர்சனம் செய்வதன் மூலம் எதிர்காலத்தில்ஒரு ஆரோக்கியமான விமர்சகராகலாம். விமர்சனத்தின் நோக்கு விதண்டா வாதமல்ல. எழுத்தோ அன்றிக் கருத்தோ செழுமைப்படுத்தப்பட்டு மக்களின் தேவைகளை வென்றெடுக்க ஒருமுகப்படுத்தப்படுவதே, இந்த நிலை மரணபயமற்ற சுதந்திரமான கருத்துப் பரிமாறலாக இருக்கும் வரைதான் அது சாத்தியமாகும். அப்பொழுதான் மரணத்தை வென்ற மக்களின் மத்தியில் விமர்சனத்தால் செழுமைப் படுத்தப்பட்ட கருத்துக்களையும் எழுத்துக்களையும், சுமந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் பவனிவரும். அதுவரை சந்தர்ப்பவாதம் கூலிக்கு மாரடித்தலும். போலிகளும். நடைமுறையைச் சந்திக்க திராணியற்ற எழுத்துருவத் தூவங்களுமே, விமர்சனங்களாக வெளிவரும். ஆகவே உண்மையான தேவையின் அடிப்படையில் ஆரோக்கியமான விமர்சனங்களின் மூலம் அவ்வுண்மைகளைத் தேடுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகக் கண்ணாடி

## சோவியத்யூனியன்



கொர்ப்பசேவ்

அக்டோபர் புரட்சியினை நினைவுகூருமுகமாக மாஸ்கோவில் இம்முறை நடாத்தப்பட்ட ஊர்வலங்களின் போது,சோவியத்ஜனாதிபதியும் இம்முறை சமாதனத்துக்கான நோபல்பரிசைப் பெற்றுக்கொண்டவருமான கொர்ப்பசேவுக்கெதிரான சுலோகங்கள் அதிகமாகக்காணப்பட்டன. கம்யூனிஸ்டுகளில் ஒருபகுதியினர் சீர்திருத்த கொள்கைகளை எதிர்க்கும் சுலோகங்களை தாங்கிச்சென்றனர். வலதுசாரிகள் கொர்ப்பசேவை இராஜினாமாச்செய்யும்படியான சுலோகங்களை தாங்கியிருந்தனர். இருபகுதியினருமே இச்சுலோகங்களை தாங்கிச்செல்ல கொர்ப்பசேவின் சீர்திருத்தக்கொள்கையே வழிவகுத்தது என்பது கவனத்துக்குரியதாகும்.

## பிலிப்பைன்ஸ்




பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதிஅக்கினோவின் தலமையிலான அரசைக்கவிழ்ப்பதற்கான சதிப்புரட்சியில் பிலிப்பைன்ஸின்தென்பகுதியிலுள்ள ககயன்,புட்டுவான் ஆகிய இருமுக்கிய நகரங்களை கேணல்அநோபின் தலைமையிலான இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கினோவின் நாலு வருட பதவிக்காலத்தில் இது ஆறாவது சதிப்புரட்சிமுயற்சியாகும். பிலிப்பைன்ஸின் ஆளும் வர்க்கங்களுக்குள் ஏற்பட்டுள்ள உள்முரண்பாடுகளும் அமெரிக்கஏகாதிபத்தியம் தனது நலன்களுக்காக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளும் பிலிப்பைன்ஸின் ஸ்திரமின்மையை உருவாக்கியுள்ளதுடன் பிலிப்பைன்ஸின் எதிர்காலம் இராணுவ சர்வாதிகார ஆட்சிமுறையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இஸ்ரேல்




அண்மையில் ஜெருசலேமிலுள்ள அல்அக்ஸா மசூதி க்ருகில் சியோனிஸ்டுகளுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பாலஸ்தீன மக்கள் மீது சியோனிஸ்டுப்பயங்கரவாதிகள் துப்பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டதில் 21பலஸ்தீனர்கள் ஸ்தலத்திலேயே படுகொலை செய்யப்பட்டதுடன் 140க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இப்படுகொலைக்கெதிரான கடுமையான கண்டனத்தை தெரிவித்திருக்கும் ஐக்கியநாடுகள்சபை இதற்கான விசாரணைக்குழு ஒன்றையும் அமைத்துள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக இஸ்ரேலின் சியோனிஸ்டு பிரதமர் கருத்து தெரிவிக்கையில் இஸ்ரேலின் பிரிக்கமுடியாத தலைநகரான ஜெருசலத்தில் ஐ.நா.சபையின் பிரசன்னத்தை இஸ்ரேலியர்கள் அனுமதிக்கப்போவதில்லை என்று கொக்கரித்துள்ளார். 1967ம்ஆண்டு சியோனிஸ்டுகளின் ஆக்கிரமிப்புக்குள்ளான கிழக்குஜெருசலேம்,மேற்குக்கரைக்காசாப்பகுதிகளில் ஆக்கிரமிப்புக்குட்பின் ஒரேநாளில் அதிகபலஸ்தீனமக்கள் படுகொலை செய்யபட்டதும்,படுகாயமடைந்ததும் இதுவே முதல்தடவையாகும்.

## ருமேனியா



ருமேனிய தலைநகரான புகரெஸ்டில் விலைவாசி உயர்வுகளை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளனர். இதற்கு முன்பு ஹங்கேரியில் பெற்றோல் விலைஉயர்வை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்குலகநாடுகளில் அடிக்கடி ஏற்படும் விலை உயர்வுகள் போன்று கடந்த காலங்களில் கிழக்கைரோப்பிய நாடுகளில் விலைஉயர்வுகள் ஏற்படாமையினால்,இன்றைய விலைஉயர்வுகளை தாங்கிக்கொள்ள முடியாத மக்கள் போராட ஆரம்பித்துள்ளனர்.மேற்குலகநாடுகளின்மீதான கற்பனையில் அதீதஎதிர்பார்ப்புக்களுடன் இருந்த மக்களுக்கு இன்றைய பொருளாதார நெருக்கடிகள் பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளதையே இவ்வார்ப்பாட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாகிஸ்தான்

திட்டமிட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களின் மூலமாக திருமதி பெனாசீர் பூட்டோவின் மக்கள் கட்சி ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய தேர்தல் நடைபெற்றுள்ளது. ஒன்பது கட்சிகள் அடங்கிய, இஸ்லாமிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியை கைப்பற்றிக் கொண்டது. இக்கூட்டணியில் முக்கியகட்சியான பாகிஸ்தான் முஸ்லீம் லீக்கின் முக்கிய நபரான நவாஸ் ஷரீப் பிரதமராகதெரிவுசெய்யப்பட்டுள்ளார். 41 வயதான நவாஸ், காலஞ்சென்ற சர்வாதிகாரி ஸியாஉல்ஹக்கின் நெருங்கிய நண்பராவார். இந்திய உபகண்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நலன்களைப் பாதுகாப்பதற்க வேண்டி பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர்களை கைக்கூலிகளாக பாவித்து வந்தது. அமெரிக்காவை முழுமையாக திருப்திப்படுத்தாத பெனாசிர் பூட்டோவின் நிர்வாகம் கவிழ்க்கப்பட்டிருக்கும் அதேவேளை தேர்தல் என்னும் போர்வைக்குள் இராணுவஆட்சியாளர்கள் மீண்டும் அமர்த்தப்பட்டிருப்பது ஒன்றும் வியப்புக்குரியதல்ல.



நவாஸ்ஷரீப்

## கியூபா



தோழர்பிடல்கஸ்ரோ

நான் மட்டும் தான் புரட்சியில் நம்பிக்கை கொண்டுள்ளேன் என்று என்னிடம் கூறுவார்களேயாயின், அப்போதும் நான் போராட்டத்தையே தொடருவேன் என்று இளம் கம்யூனிஸ்ட் யூனியன் தலைவர்கள் மத்தியில் உரையாறறுகையில் தோழர் காஸ்ரோ கூறினார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இலட்சியங்களுக்காகப் போராட்டங்களைத் தொடரும் ஒரு மனிதனாகவே புரட்சிவாதியொருவன் இருக்கமுடியும். கியூபத்தேசத்தில் கம்யூனிஸ்ட் அமைப்புமுறையை எமது அரசு பலப்படுத்த வேண்டும். [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல்.

ஆனா



வாத்தியார் சார்மனைக் கட்டிலுக்குள் படுத்திருந்து புத்தகமொன்றை வாசித்துக்கொண்டிருந்தார்.படலை திறக்கும் சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தார்.சங்கரப்பிள்ளையர் வந்துகொண்டிருந்தார்.

வாரும் வாரும் பிள்ளையர்இப்படி உட்காரும்.வாத்தியார் வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டபிள்ளையர் வாயில் கை வைத்தபடி

ஊரெல்லாம் சின்னாபின்னப்படுகுது என்னெண்டு வாத்தியார் உங்களாலை இவ்வளவு அமைதியாய் புத்தகம் வாசிக்கமுடியுது.

சிரித்துக்கொண்ட வாத்தியார்.

பிள்ளையர் இந்த நிலை உங்களுக்கு கட்டாயம் ஒரு நாளைக்கு வரப்போகுதெண்டு உமக்கு நான் எத்தனையோதடவை செல்லியிருக்கிறன்.நீர்அதைக் கணக்கிலை போட்டுக்கொள்ள வில்லை.என்னைப்போல் எத்தனையோ பேர் இந்தச்சனங்களுக்குச் சொல்லியும் எந்தப்பிரியோசனமுமில்லை. தமிழீழம் என்ற ஐஞ்செழுத்தை வைச்சே உங்களுக்கு நெத்தியடி அடிச்சிருக்கு. நீங்கள் இவ்வளவு பட்டும் இன்னும் திருந்தவில்லை என்பதை நினைக்கத்தான் கவலை.

நீங்கள் சொல்லேக்க பார்த்தால் எல்லாம் சரியாய்தான் படுகுது.உங்கட படலையைத்தாண்டிப் போனால் மற்றவை சொல்லுறது சரிபோலகிடக்கு.

பிள்ளையர் உமக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறன்.ஊரார்கதை கேட்டு உதவாக்கரையாய் போகாதேயுமெண்டு.உம்மைப்போல எல்லாற்றை கதையையும் கேட்டு சன்னதம் ஆடுறஆக்கள் இருக்குமவரைக்கும் நாம நிம்மதி

டு கோலாட்டமடிக்கனம்.

வாத்தியார் நான் உங்களிட்டை என்னவோ ட்கவந்து எங்கயோ போயிட்டன்.

என்ன பிள்ளையர் காசுகீசு கைமாற்றாய் ே மோ?

சீச்சீ அதில்லைவாத்தியார். இப்ப எங்கள க்கம் கொஞ்சம் ஒஞ்சு கிடக்கு.இனிஎப்ப விழாவோதெரியாது. இப்ப என்னடா எ ல் பொடியங்களை படிக்கவேண்டாமாம்.ப கிறதெண்டா எட்டாம் வகுப்பு படிச்சாகா மாம்.இதென்ன வாத்தியார்.

பிள்ளையர்.நானும் பிள்ளையளுக்கு படிப்பி வாத்திதான்.போனகிழமை பூலோகசிங்க தின்ரை மகன் பரமேசையும் பிள்ளையளுக்கு யூசன் சொல்லிக்கெடுக்க வேண்டாம் ரியு ரியைபூட்டு எண்டு சொல்லியிருக்காம்.இத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிள்ளையருக்கு அடக்க முடியாதசிரப்பு.பக்க கட்டம் விட்டுச் சிரித்துவிட்டார்.

வாத்தியார் உவ்வளவுபடிச்சும் ஒண்டும் தெரியேல்லை.நீங்கள் சொல்ல வந்தது கொம்யூனிசமோ அதுதானே எதைப்போய் கொமேனிசம் என்கிறியள்.அதுக்கு மிதுக்குமென்ன சம்பந்தம். பிள்ளையரின் அறிவிலித்தனத்தை நினைத்து வாத்தியார் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

பிள்ளையர் கம்யூனிசம் வேற கொமேனிசம் வேற.ஈரானை ஆட்டிப்படைச்ச கொமேனி சொன்னாராம் ஈரான் மக்கள் ஆங்கிலம் படிக்கக்கூடாதெண்டு.ஏனெண்டு சனம் கேட்டதுக்கு உலகத்திலை வேற ஆராவது பார்சி மொழிபடிக்கினமோ(ஈரான் மொழி) இல்லைத்தானே பிறகேன் நாங்கள் ஆங்கிலம் படிக்கவேணும்.ஒருத்தரும் படிக்காதேயுங்கோ எண்டு. சனம்செம்மறியாடுகள் மாதிரி தலையாட்டிச்சதுகளாம்.ஆனால் கொமேனிநினைச்சது வேற.

அதென்ன வாத்தியார்.

பிள்ளையள் தனிய பார்சிமொழியை படிச்சால் கிணத்துத் தவளையாய் வைச்சிருக்கலாம்.ஆங்கிலம் படிச்சு உலகத்தைப்பற்றி அறிய வெளிக்கிட்டால் தன்ரை கதிரை காலி.பார்சி மொழியை தனியப்படிச்சால் தாங்கள் சொல்லுறதை எழுதுறதை படிச்சுப்போட்டு இதுதான் உலகமெண்டு நாங்கள் சொல்லுறதை சனங்கள் கேட்டு நடக்கும்.எண்டு கொமேனி கொண்டுவந்த சிறந்த திட்டம் தான் கொமேனிசம்.

அதுசரி வாத்தியார் ஈரான் சனம் இங்கிலீசுபடிக்காததுக்கும் எங்கட பிள்ளையள் எட்டாம் வகுப்பு படிக்கிறதுக்கும் ஏன் முடிச்சுபோடுறியள். இதை நீர்மட்டுமில்லை எல்லாரும் அறியவேணும்தானும். பிள்ளையள் படிக்கக் கூடாதென்கிறதுக்கு என்ன காரணம் சொல்லுகினம்.

அது வாத்தியார் பொடியள் சொலலுறது சரிபோலதான் கிடக்கு இவ்வளவு நாளும் தியாகம் செய்த பொடியள் ஒண்டும் பெரிய அறிவாளிகள் இல்லை.அறிவாளியள் எல்லாம் ஒண்டில் வெளி நாட்டுக்கு கூப்பி ஓடுகினம் [illegible]


ரத்து குழப்பியடிக்கினம்.ஆனபடியாலை படிக்க வேண்டாம்.போராடினால் போதுமென்கிறாங்கள்.நீங்கள் கூட என்னைச் சில வேளை குழப்போ குழப்பெண்டு குழப்பிறியள்.அது கிடக்கட்டும்.பொடியள் சொல்லுறதிலை நியாயமிருக்கோ இல்லையோ தெரியேல்லை.ஒரு பக்கம் பார்த்தா பிழை மாதிரி கிடக்கு,ஒரு பக்கம் பார்த்தா சரி மாதிரி கிடக்கு .

பிள்ளையர் இவை சொல்லியிருக்கிற நியாயம் கொமேனி ஆங்கிலம் ஏன் படிக்கக்கூடாது எண்டு சொல்லியிருக்கிற நியாயம்தான்.

இதிலை வந்து நீங்கள் ஒண்டை விளங்கிக்கொள்ள வேணும் துவக்கு சுடுகிறது மட்டும் தான் போராட்டமில்லை.அரசியல் தெளிவோட துவக்குசுடவேணும். அரசியல் தெளிவுகிடைக்க படிக்க வேணும்.படிச்சால் சனம் கேள்வி கேட்கும்.சனம் கேள்வி கேட்டா அரசியல் தெளிவில்லாமல் துவக்கு தூக்கினவையாலை பதில் சொல்லேலாது.ஒரே வழி கேள்வி கேட்டவையை துரோகியெண்டுபோட்டு துவக்காலை பதில் சொல்லுறதுதான்.இதை நெடுக செய்யேலாது. அதாலை யோசிச்சுகண்டுபிடிச்ச புதிய கண்டுபிடிப்புஒருத்தரும் படிக்ககூடாது.படிச்சாலும் எங்கடைலெவலுக்கு படிச்சா போதும்.அப்பதான் சனம்கேக்கிற கேள்விக்கு நாங்கள் பதில் சொல்லலாம் எண்டு நினைச்சிட்டினம்.அறிவாளிகள்எல்லாரையும் துரோகியெண்டுவெடிவைச்சா அவை ஓடத்தான் செய்வினம்.கனபேர் இதுதான் சாட்டெண்டு ஓடிட்டினம் அதுவேறகதைகாணும். மற்றது இங்க இருக்கிற அறிவாளியள் ஒருஅரசியல்தீர்வுக்கு யோசினையளை முன்வைச்சால் அதைவிளங்காதவைக்கு அது குழப்பிற மாதிரி தான் தெரியும்.நீர் என்னை சொல்லுறமாதிரி உண்மையான அரசியல் தீர்வு வந்தால் துவக்கு சுட்டுக்கொண்டு சனங்களை பேய்க்காட்டேலாது.ஆனபடியாலை எல்லாரும் எட்டாம் வகுப்பு படிச்சாபோதுமெண்கினம்.இதுஎங்கடை சனங்கள்மேலை,இனத்தின்மேலை,நாட்டின்கல்வி,பொருளாதார,அரசியல்,மனிதநேய வளர்ச்சியி [illegible] அபாயத்தைத்தான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐக்கியப்படுவோம்

# போராடுவோம்

# அமைதி காண்போம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்